Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 06 புதன்கிழமை (20.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 232

# இன்று பூரண ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவியின் படுகொலையைக்கண்டித்து இன்று வடபகுதி முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று அரச, தனியார் அலுவலகங்கள், பாடசாலைகள், கல்விக்கூடங்கள் வர்த்தக நிலையங்கள், தொழில் மையங்கள் உட்பட அனைத்தும் மூடப்பட்டிருக்கும் என்றும் முழுமையான கடையடைப்பு நடக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கமும், இளைஞர் கழகங்களின் சமேளனமும் இணைந்து இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

இன்றைய ஹர்த்தாலுக்கு சிவில் அமைப்புக்கள் பலவும் வர்த்தகர் சங்கமும் யாழ். பிராந்திய பஸ்கம்பனிகளின் இணையம், மாணவர்அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் உட்பட பல்வேறு அமைப்புக்கள் தமது பூரண ஆதரவை தெரிவித்துள்ளன.

இன்றைய தினம் அத்தியாவசிய மருத்துவசேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் அனைத்தும் செயலிழக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புங்குடுதீவு மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி சிவலோகநாதன் வித்தியா கோரமாக வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும், குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை வழங்கக் கோரியும்,

வடக்கு மாகாணத்தில் உள்ள அத்தனை நிறுவனங்

19 ஆம் பக்கம் பார்க்க

# கொலை சந்தேக நபரை மீட்டெடுக்க தந்திரம்


## கூட்டமைப்பு பிரமுகர் சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவியின் படுகொலையுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர் என்று சந்தேகிக்கப்படும் முக்கிய சந்தேக நபரை பொலிஸாரின் பிடியில் இருந்து மிக தந்திரமாக மீட்டெடுத்து அவரை வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்க தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முக்கிய பிரமுகரும் சட்ட அறிஞரும், சட்ட விரிவுரையாளருமான வி.ரி.தமிழ்மாறன் பகிரத பிரயத்தனம் செய்துள்ளார்.

இவரது முயற்சியால் அவர் புங்குடுதீவில் இருந்து வெளியேறி வெளிநாட்டுக்கு தப்பிச் செல்வதற்காக கொழும்புக்குச் சென்று விட்டார். இந்த விவகாரம் புங்குடுதீவு மக்களுக்கு தெரியவந்ததையடுத்து அங்கு நேற்று பெரும் கொந்தளிப்பு நிலை தோன்றியது. மேற்படி விவ

19 ஆம் பக்கம் பார்க்க



# ஸ்தம்பித்தது யாழ். நகரம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து யாழில் பல்வேறு தரப்பிலும் போராட்டங்கள் மேற்கொள ளப்படுகின்றன.

நேற்று இடம்பெற்ற போராட்டத்தினால் யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதினால் இயல்பு நிலை பாதிப்படைந்திருந்தது.

யாழ்.நகரில் உள்ள யாழ். இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம், திருக்குடும்ப கன்னியர்மடம், போன்ற பாடசாலை மாணவர்கள் இக்கொலையை கண்டித்தும் குற்றம் புரிந்தவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கக்கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டிப்போம் என்ற தொனிப்பொருளில் இக்கொலையைக் கண்டித்து நல்லூர் கந்தன் ஆலய முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமாகி யாழ். நகர் வழியாக யாழ். செயலகம் வரை சென்று ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் இவர்

19 ஆம் பக்கம் பார்க்க

# யார் இந்த தமிழ்மாறன்



(கொழும்பு)

புங்குடுதீவுப்படுகொலையின் சூத்திரதாரி சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிச்செல்ல உதவினார் என்று புங்குடுதீவு மக்களால் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் அந்த சட்டத்தரணி வி.ரி. தமிழ்மாறன் தொடர்பாக மேலதிக தகவல்கள் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இவர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்

19 ஆம் பக்கம் பார்க்க

# கொலையாளி தப்பிச் செல்ல சட்டத்தரணி உதவினார்

## மாகாணசபை உறுப்பினர் ஒப்புக்கொள்கிறார்

புங்குடுதீவு படுகொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் மிகவும் சுதந்திரமான முறையில் புங்குடுதீவிலிருந்து வெளியேறி கொழும்புவரை சென்றிருக்கிறார் எனவும், அவர் வெளிநாடு ஒன்றுக்கு தப்பிச்செல்ல இருந்தார் எனவும் சொல்லப்படுகிறது. அதிலும் குறிப்பாக கொழும்பிலிருந்து திடீரென யாழ்ப்பாணத்துக்கு வந்த பிரபல சட்டத்தரணியும், சட்ட விரிவுரையாளருமான வி.ரி.தமிழ்மாறன் இதில் நேரடியாகவே தலையீடு செய்துள்ளார் என அப்பகுதி மக்கள் பகிரங்கமாக தன்னிடம் குற்றம் சுமத்தியுள்ளனர் என வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

நேற்று புங்குடுதீவு சர்வோதயத்தில் இடம்பெற்ற பொலிஸாருக்கும், பொது மக்களுக்கும் இடையிலான சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டின் நீதித்துறை இவ்வளவுதானா? என்கின்ற மிகப்பெரிய கேள்வியை மக்கள் மிகவும் அங்க

19 ஆம் பக்கம் பார்க்க

# அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் முடக்கம்

## நேற்றைய திடீர் கடை அடைப்பால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவியின் படுகொலையைக் கண்டித்து நேற்றுக்காலை யாழ். நகரப்பகுதியில் இளைஞர்கள் திடீரென மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தினால் பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்டதுடன், பதற்றமான சூழ் நிலையும் காணப்பட்டது.

நேற்றுக்காலை யாழ்.நகர்ப்பகுதியில் திடீரென ஒன்று கூடிய இளைஞர்கள் வர்த்தக நிலையங்கள், வங்கிகளுக்கு சென்று வற்புறுத்தி அவற்றைப்பூட்ட வைத்தனர். அத்துடன் சில வர்த்தக நிலையங்கள் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. எவ்வித முன்னறிவுப்புமின்றி குறித்த இளைஞர்கள் மேற்கொண்ட இந்த

19 ஆம் பக்கம் பார்க்க

# புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு யாழ்.வணிகர் கழகம் கண்டனம்

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி வித்தியாவின் கோர மான படுகொலையை யாழ்.வணி கர் கழகம் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர் பாக யாழ்.வணிகர் கழகம் விடுத்துள்ள பத்திரிகைச் செய்தி யில,

சமூகத்தின் இம்மாதிரியான சம்பவங்கள் அதிகரித்து வரு கின்றமை மிகவும் துரதிஷ்ட மானதும் மிகவும் மனவருத்தத் திற்கும் உரியதாகும். எமது பிரதேசத்தில் அதிகரித்துள்ள மதுப்பாவனை மற்றும் போதைப் பொருள் பாவனையின் விளைவா கவே இம்மாதிரியான சம்பவங் கள் தலைவிரித்தாடுவதனை காண முடிகின்றது.

இதுசம்பந்தமாக ஒவ்வொரு பொது மகனும் விழிப்புடன் செயற்பட வேண்டிய ஒரு கால கட்டமாகும். சமூக அமைப்புக் கள் கிராமிய மட்டங்களில் மதுபாவனைகளை கண்காணித்து அவற்றை களைய முன்வர வேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும் இவ் வாறான சம்பவங்கள் நடை பெறாத வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் அந்தந்த ஊர் அமைப்புக்கள் ஈடுபட வேண் டும். இதன் மூலமே பாதுகாப் பான சமூக ஒழுங்கமைப்பை நாம் உறுதி செய்து கொள்வதுடன் எமது எதிர்கால சந்ததியையும் இனத்தையும் பாதுகாக்க முடி யும்.

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் இன்று நடாத்தும் ஆர்ப் பாட்டத்திலும் வடமாகாண ஆளுநரிடம் மனுகையளிக்கும் நிகழ்விலும் அனைத்து வர்த்த கர்களும் கலந்துகொண்டு ஆதரவை தெரிவித்துக் கொள் ளுமாறும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிராமங்களில் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர் சந்திரகுமார்

## பிரதேச சபை உறுப்பினர் இராமச்சந்திரன் புகழாரம்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்கள் உருவாகிய காலத்திலிருந்து இன்று வரை எவராலும் மேற்கொள்ள முடியாத பல வேலைத்திட்டங் களை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நடைமுறைப்ப டுத்தியுள்ளார் என கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் இரா மச்சந்திரன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் திங்கட் கிழமை கோணாவில் கிழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந் திரகுமாரினால் மேற்கொள் ளப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இராமச்சந்திரன் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

இன்று கிளிநொச்சி மாவட் டத்தின் அனைத்து கிராமங்களும் மின்சாரத்தினை பெற்றிருக் கின்றன. கிராமப்புற பாடசாலை களும் தலைநிமிர்ந்த கட்ட டங்களுடன் மிடுக்கோடு காட்சி தருகின்றன ஒவ்வொருவருடைய காணிகளிலும் கல்வீடுகள் தென்படுகின்றன. பல கிராமி யவீதிகள் புனரமைக்கப்பட்டி ருக்கின்றன பாலங்களும் நிர் மாணிக்கப்பட்டுள்ளன. விவசாய உபகரணங்கள் இல்லாத வீடுகள் இல்லை. இவை அனைத்திற்கும் மேலாக தரம் ஐந்து மாணவர்களின் பெறு பேற்றினை உயர்த்தும் நோக் குடன் அன்பழகன் ஆசிரியரின் மாதிரி வினாத்தாழ்களை தனது நிதியிலிருந்து வருடாந்தம் மாண வர்களுக்கு இலவசமாக விநி யோகித்து வருகின்றார்.

அத்தோடு ஒவ்வொரு மக்களுக்கும் தேவைகள், பிரச்சினைகள், ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதனை நிவர்த்தி செய்யும் வழியைத்தேடும்போது அவர்களின் மனங்களில் நினை வுக்குவரும் ஒரே பெயர் நாடாளு மன்ற உறுப்பினர் சந்திரகுமார் தான். அந்த அளவுக்கு அவரின் சேவை கிளிநொச்சி மாவட்டத் தின் அனைத்து பகுதிகளிலும் பரந்து கிடக்கின்றது.

இவ்வாறான சேவைகளை அவர் எவ்வாறு மேற்கொள் கின்றார் என்று நோக்கினால் அவரிடம் காணப்படும் தலை மைத்துவப்பண்பும் மக்களுக் காக பணிசெய்ய வேண்டும் என்ற உண்மையான சிந்தனை கொண் டிருப்பதும் செயற்பாடுகளை சரியாக அணுகக்கூடிய நிர்வாக நடைமுறைகளை அவர் நன்கு தெரிந்து வைத்திருப்பதனாலுமே ஆகும்.

இன்றுள்ள அரசியல் தலை வர்களைப் பொறுத்தவரையில் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக வேசங்களைப் போட்டுக்கொண்டும் பொய்யான கோசங்களை இட்டுக்கொண்டும் தேர்தல் காலத்தில் மட்டும் மக்களிடம் வந்துபோகின்றார் கள். ஆனால் அரசியல்வாதியாக இருந்தாலும் அரசியல் இலாப நோக்கங்களை கடந்து மக்க ளுக்கு சேவையாற்றிய ஒரே யொரு மக்கள் பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந் திரகுமாரின் மட்டுமே காணமுடி கின்றது இதனை மக்களும் நன்கு அறிவர.

இக்கலந்துரையாடலின் போது கோணாவில் கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச் சினைகள் குறித்தும் மேலும நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள் குறித்தும் நாடாளு மன்ற உறுப்பினரினால் விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் அன்ரன் அன்பழன் கோணாவில்கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் லோகநாதன் மற்றும் அபிவிருத் திச்சங்கத்தின் உறுப்பினர்கள், கிராமத்தின் முக்கியஸ்த்தர்கள் மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் மின்னொழுக்கால் தீ விபத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கில் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

வெலிங்டன் சந்தியிலுள்ள இந்த வர்த்தக நிலையத்தில் நேற்று நண்பகல் 1.30 மணி யளவில் இடம்பெற்ற கடைய டைப்புப் போராட்டத்தில் கடை மூடப்பட்டிருந்த நிலையில் இம்மின ஒழுக்கு ஏற்பட்டு தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

இத் தீ விபத்தினை அடுத்து யாழ். மாநகரசபையின் தீய ணைப்பு வாகனம் வந்த பொழு திலும் மின்னொழுக்கு என்ற காரணத்தினால் நீர் பாய்ச்ச முடியாத நிலையில் தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டி ருந்தது.

எனினும் இவ்விபத்தினால் ஏற்பட்ட சேதம் குறித்து கணக்கி டப்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதுதொடர்பாக யாழ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

# கடற்றொழில் முதலீடுகளை முன்னெடுக்க நடவடிக்கை

அராலி கடல்வள பிரதே சத்தில் புதிய தொழில்நுட்ப தொழில் நுணுக்க முறையின் கீழ் இறால், நண்டு உயிரி னங்களை வளர்ப்பதற்கு புதிய கடற்றொழில் முதலீடுகளை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சண்முகலிங்கம் சபையின் கடல்வள அபிவி ருத்தி தொடர்பாக கடல் சார் அபிவிருத்தி நிறுவனங்களுடன் தொடர்புகொண்டுள்ளார்.

வலி.மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட அராலி கடல்வள பிர தேசத்தின் பெரும்பாலானவை உபயோகமற்று உள்ளது. சிறு முதலீட்டு திட்டங்களுடன் அப் பிரதேசங்களை அண்டியதாக கடற்றொழில் செய்ய அனு மதிக்கப்பட்டவர்களுக்கு இறால் நண்டு உற்பத்தி செய்ய நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (92)

# காமுகர்களுக்கான கடுமையான தண்டனையே சமூகத்தின் பாதுகாப்பாக அமையும்

## நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

காமுகர்களுக்கு வழங்கும் கடுமையான தண்டனையே எதிர்கால சமூகத்தின் பாதுகாப் பாக அமையும் என நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந்திரதாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

சமூகத்தில் வாழும் ஒவ் வொருவரும் தமது பகுதிகளி லுள்ள இளம் பெண்களின் வாழ் வியலை பாதுகாக்க அனைத்து பேதங்களையும் மறந்து ஒன்று திரளவேண்டும். அதனூடாக சமூகத்தினதும் அதனை பிரதி நிதித்துவப்படுத்துவதுமான அனைத்து விடயங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்

கடந்த சிலநாட்களுக்கு முன்னர் காமுகர்களால் படு கொலை செய்யப்பட்ட சிவலோ கநாதன் வித்தியாவை படு கொலை புரிந்தவர்களை எவரது தலையீடுகளும் இன்றி சட்டத் தின் முன்நிறுத்தி கடு மையான தண்டனை வழங்கவேண்டும்.

சமூகத்தில் தண்டனைகள் இறுக்கமடையும் போதுதான் தவறுகள் குறைவடையும். அத்த கைய தவறுகளை குறைப்ப தற்கு பொலிஸாருடன் பொது மக்களும் தமது பூரண ஒத் துழைப்புக்களை வழங்க வேண் டும்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலான யுத்த வடுக்களை சுமந்து வாழ்ந்த எமது மக்கள் தற்போதுதான் வாழ்வியலில் ஓரளவேனும் மாறுதல்களை ஏற்படுத்திக் கொண்டிருக் கின்றனர். அத்தகைய ஒரு நிலை யில் சமூக விரோதக்கும்பல்களின் அதிகரித்த நடவடிக்கைகள் கார ணமாக குடாநாட்டின் பாது காப்பு சிதைக்கப்பட்டு வரு கிறது.

வாள்வெட்டுக் கலாசாரம், ஆள்கடத்தி கப்பம் பெறும் கலாசாரம் என தொடர்ந்து சீரழிவுகள், இன்று காமவெறி யாட்டங்களாகவும் பரிணமித்து விட்டன. இத்தகைய சமூக விரோதசெயற்பாடுகளை உடன டியாக கட்டுப்படுத்த பொலிஸா ரும் சமூக நலன் கொண்டவர்க ளும் முன்வர வேண்டும்.

சமூக விரோதிகளை கட்டுப் படுத்த யார் முன்வந்தாலும் அவர்களுக்கு ஒத்துழைப்புத்தர. நாம் என்றும் தயாராகவே உள் ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

# மின்சாரம் தடை

மின்விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக குடாநாட்டின் சில இடங்களில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

மாதகல், மாதகல் ஜெற்றி, ஜம்புகோளப்பட்டினம், கட்டுப் புலம் ஆகிய இடங்களில் தடைப் பட்டிருக்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.



# நாமும் நமது சமூகமும் எப்போதும் புனிதமாக இருப்பதாகவே போதிக்கும்வரை...

### எழுகதிரோன் கட்டுரையிலிருந்து

**யாழ்.** புங்குடுதீவு ஆலடிச் சந்திப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்செய்தியானது வடக்கு மாகணமெங்கும் பாரிய அதிர்வலைகளை தோற்றுவித்துள்ளது. இம்மிலேச்சத்தனமான படுகொலையையிட்டு வடக்கின் பல பிரதேசங்களிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் சாலை மறியல் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மாணவி கொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் பெற்ற வாக்கு மூலத்தின் அடிப்படையில் அவர்கள் மூவரும் கொலை செய்யப்பட்ட மாணவியின் உறவினர்கள் எனவும் குடும்பப் பகையே இக்கொலைக்குக் காரணம் எனவும் சொல்லப்படுகின்றது.

இந்த வித்தியாவின் கொலைக்கு காரணமானவர்களௌன சந்தேகத்தின் பெயரில் கைதாகியுள்ள குற்றவாளிகளுக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் ஆஜர் ஆகக் கூடாது எனவும், அவ்வாறு ஆஜர் ஆகும் சட்டத்தரணிகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியான மாபெரும் போராட்டத்தினை முன்னெடுப்போம் எனவும் யாழ். பல்கலைக்கழக சமூகம் எச்சரித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பதவி வகித்த "கற்பழிப்பு கணேசலிங்கம்" போன்றவர்கள் தனது வீட்டில் வேலைக்கமர்த்தியிருந்த சிறுமியை பல ஆண்டுகளாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதன் காரணமாக குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டபோது அவருக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர்கள் வக்கீல்களாக நீதிமன்றில் வாதாடி வரலாற்று புகழ் கொண்டனர். அப்போது திறக்காத வாயை இப்போதாவது யாழ். பல்கலைக்கழக சமூகம் திறந்துள்ளதே என நாம் நிம்மதி கொள்ள முடியாது. அன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பே பாலியல் வன்முறையாளனுக்கு ஆதரவாக வாதிட நீதிமன்றம் செல்லாதே என்று இந்த யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் எச்சரித்திருந்தால் இன்று வித்தியாவுக்கு இந்தக் கதி நேர்ந்திருக்காது.

இக்கொலை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வடக்கு மாகாண பிரதிபொலிஸ் மா அதிபருக்கு அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில் "வடக்கில் காணப்படும் குற்றங்களோடு தொடர்புடையவர்கள் சம்பந்த்மாக பொலிஸ் எடுக்கின்ற நடவடிக்கைகளின் மீது கேள்வி எழுந்துள்ளது." "இத்தகைய கொடூரமான வெறித்தனமான குற்றவாளிகளால் மேற்கொள்ளப்படும் சம்பவங்களால் வடக்கு மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது" என்றவாறு அரசாங்கத்தை நோக்கிய சகட்டுமேனித்தனமான குற்றச்சாட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. அதற்கிடையில் அந்த கடிதம் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பப்பட்டதோ இல்லையோ கவனமாக பிரதி செய்யப்பட்டு "தமிழ் வின்" இணையத்தில் பிரசுரிக்கப்பட்டதனூடாக சிறிதரன் தனது நோக்கினை ஈடேற்றிவிட்டார்.

இத்தகைய கொலை கொடூரங்கள் வடக்கில் அடிக்கடி இடம்பெற்றே வருகின்றன. கடந்த ஒருசில தினங்களுக்கு முன்னரும் யாழ்ப்பாணத்தில் ஒரு பெண் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். மூன்று மாதங்களுக்கு முன்னர் வன்னியிலும் சரண்யா என்னும் பெற்றோரை இழந்த பதினாறு வயது மாணவி ஒருத்தி பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு பின்னர் இறந்து போனார். ஆனால் இந்த கொலைகளெல்லாம் அதிக கவனம் பெறவில்லை. வெட்டிக்கொல்லப்பட்ட பெண் கணவனை இழந்தவள் என்பதும் அவள் இளைஞன் ஒருவருடன் தொடர்பு கொண்டிருந்தாள் என்பதும் அவளைப்பற்றி வெளிவந்த செய்திகள். இதனூடாக எமது சமூகத்தின் பார்வையில் உண்டாகக் கூடிய அவள்குறித்த "கீழ்த்தர" எண்ணமும் அவள் ஏதோ ஒரு வகையில் தண்டிக்கப்பட வேண்டியவள்தான் என்கின்ற வரட்டு மனநிலையும் அந்த மௌனத்துக்கு காரணமாயிருக்கலாம்.

எப்படியோ இத்தகைய கவனயீர்ப்பு வித்தியாவின் கொலையின் பின்னராவது இடம்பெற்றிருப்பது நிம்மதியை தருகின்றது. ஆனால் இந்த வக்கிர எண்ணம் கொண்ட இளைஞர்களின் உருவாக்கம் எதிலிருந்து தொடங்குகின்றது? இவர்கள் எப்படி இத்தகைய கொடுமைகளை மிக மிக சாதாரணமாக செய்துவிடும் மனோநிலைக்கு தள்ளப்படுகின்றார்கள்? இத்தகைய பாலியல் வன்முறைகளுக்கும் கொலைகளுக்கும் பின்னணியில் இருந்து செயற்படும் எமது சமூக உறவுகளின் தாக்கம் எத்தகையது? எமது கலாசாரம், பண்பாடு என்கின்ற பெயர்களில் கட்டிக்காக்கப்படும் சாதிய ஆணாதிக்க தடிப்புகளும், சண்டித்தனங்களும் இத்தகைய மிலேச்சத்தனங்களுக்கு எப்படி துணைபுரிகின்றன? என்கின்ற கேள்விகளை நாம் ஒருபோதும் கேட்பதில்லை.

பொலிஸ் தரப்பு பதிவுகளுக்கு அப்பால் இதுபற்றிய ஆய்வுகளோ தரவு சேகரிப்புகளோ எமது சமூகமட்டத்தில் இல்லவேயில்லை. தம்மை சமூக ஆர்வலர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களோ சிவில் சமூக பிரதிநிதிகள் என்று தேர்தல்காலங்களில் மட்டும் தலைகாட்டி தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு குஞ்சம்கட்ட பாதிரி–மாரோடு இணையும் அரைவேக்காட்டு புத்திஜீவிகளோ இத்தகைய முயற்சிகளில் இறங்குவதேயில்லை. அவர்களுக்கு அது அவசியமானதொரு பணியாக தெரிவதில்லை.

ஏதோ பிறந்தோமா படித்தோமா முடிந்தவரை உழைத்தோமா என்று செக்குமாட்டுத்தனமாக செயற்படுபவர்களே எமது சமூகத்தின் மதிப்புக்குரியவர்களாகின்றார்கள். இந்த இழிநிலை எப்போது நீங்குகின்றதோ அப்போதுதான் தமிழ் சமூகத்தில் ஒரு பொதுநல அக்கறைகொண்ட சிவில் கட்டமைப்பு துளிர்க்கமுடியும்.

அதுவரை "எரிகின்ற வீட்டில் முடிந்தவரை பிடுங்கியது இலாபம்" என்னும் கொள்கை கொண்ட கூட்டமைப்பு தலைவர்களே எம்மை வழிநடத்துவார்கள்.

குறைந்த பட்சம் ஊடக தர்மம் என்பது பற்றிய எந்தவித அறிவும் இலங்கை செய்திகளை மையமாக கொண்டு செயற்படும் செய்தி ஊடகங்களை நடத்துபவர்களில் பெரும்பாலானோருக்கு இல்லை என்பதை கடந்த சில நாட்களாக இணையத்தளங்களில் வித்தியாவின் படங்கள் பட்டபாடும் அது குறித்து வெளியான ஆபாச தலைப்புகளும் சொல்லி நிற்கின்றன. மேற்கு நாடுகளில் இதுபோன்ற சம்பவங்களின்போது ஒருபோதும் இப்படியான புண்ணாக்குத்தன ஜேர்ணலிசம் செய்ய முடியாது. ஏன் இந்தியாவில் கூட இதுபோன்ற பாலியல் வன்முறை, கொலைகளுக்கு உள்ளான பாதிக்கப்பட்ட பெண்களின் படங்களை வெளியிடுவது சட்டரீதியாக தடை செய்யப்பட்டேயுள்ளது.

மறுபுறம் எடுத்ததற்கெல்லாம் அரசாங்கத்தையும் ஆமியையும் அடுத்தவனையும் குற்றம் சொல்லிச் சொல்லியே வருவதன் அறுவடை தான் மூன்று இளைஞர்கள் அதுவும் சகோதரர்கள் இதுபோன்ற குற்றச் செயல்களில் திட்டமிட்டு ஈடுபடும் தைரியத்தை வழங்குகின்றது. எது நடந்தாலும் எமது சமூகத்தின் வண்டவாளங்களையெல்லாம் மூடிமறைத்து தமிழனின் "புனிதத்தை" பாதுகாக்கும் தலைவர்கள் இருக்கும் வரை வித்தியாவையும் சரண்யாவையும் கொலைசெய்யும் பாதகர்கள் பயப்பட போவதில்லை.

இதுபோன்ற கொலைகளின் போது தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல்வாதிகளின் விடுகின்ற தூரநோக்கற்ற அறிக்கைகளும் செயற்பாடுகளும் மறைமுகமாக அல்ல நேரடியாகவே இந்த கொலைக் குற்றவாளிகளை பாதுகாக்கின்றது. தமிழ் சமூகத்தின் அகச்சூழல் எவ்வளவு அசிங்கமாக இருக்கின்றது என்பதையிட்டு எந்த அரசியல் வாதியும் பகிரங்கமாக் வெட்கத்தை ஒப்புவிப்பதில்லை. எப்போதும் நாமும் நமது சமூகமும் புனிதமாக இருப்பதாகவே போதிக்கின்றார்கள். எங்கிருந்து வருகின்ற யார் யாரோவெல்லாம் தான் எமது சமுகத்தை கெடுக்கின்றார்கள் என்கின்ற மாயையை நாம் கட்டிக்காக்கும் வரை எமது சமூகத்தினை அழுகி நாறச்செய்யும் இந்த போக்கிரிகளுக்கும் பொறுக்கித்தனங்களுக்கும் குறைவிருக்கப் போவதில்லை.

# சட்டவலிமை செயற்பாடுகள் இன்மையே குற்றங்கள் அதிகரிப்பதற்குக் காரணமாகும்

### பெண் விடுதலை சிந்தனை அமைப்பு தெரிவிப்பு

நாட்டில் பெண்கள், மாணவிகள், சிறுவர்கள் மீதான பாலியல் சித்திரவதைகளும், வன்புணர்வுகளும், கொலைகளும், தொடர்ச்சியாகவே நீண்டு செல்கின்றன. இதில் ஒன்றாகவே கடந்த வாரம் புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியா (வயது 18) மீதான வன்புணர்வு கொலையாகும். இவற்றைத் தடுத்து நிறுத்தக்கூடிய சமூகச் சூழலோ, சட்ட வலிமை கொண்ட செயற்பாடுகளோ, இல்லாத நிலையே இன்று காணப்படுகின்றது. எனவே பெண்கள், மாணவிகள், சிறுவர்கள், மீதான பாலியல் வன்புணர்வுகள், சித்திரவதைகள், கொலைகள், போன்றவற்றைத் தடுத்து நிறுத்தவும், அவர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதத்தை சட்டரீதியாகவும், நடைமுறை வழிகளாலும், வழங்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் விரைந்து செயற்படுத்த வேண்டும் எனப் பெண் விடுதலை சிந்தனை அமைப்பு கேட்டுக் கொள்கின்றது.

அதேவேளை புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி சிவலோநாதன் வித்தியா மீதான பாலியல் வன்புணர்வுப் படுகொலைக்கு கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்கின்றது.

அதில் சம்பந்தப்பட்ட வெறிகொண்ட கயவர்களை எவ்வகையிலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக் கொள்ள இடமளிக்கக் கூடாது. இவ்வாறு பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் அமைப்பாளர் சந்திரா நவரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் இவ் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, கடந்த வாரம் புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கொடுமாக பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமையானது. கல்மனம் படைத்தவர்களைக்கூட மனங்கலங்கவைத்த சம்பவமாகும்.

இது போன்ற பெண்கள் மீதான பாலியல் வக்கிரச் செயற்பாடுகளும், வன்புணர்வுகளும், சித்திரவதைகளுக்கும் தனியே சட்டத்தையும், சட்டத்தின் காவல்களையும் எதிர்பார்த்து நிற்க முடியாது. இவைகளின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஏனையவர்கள் அரசியல் சமூகத்தலைவர்கள் என்போர் தமது சமூகக் கடமைகளில் இருந்து தவறிக் கொள்கின்றார்கள். பெண்களை உயிர் உள்ள நுகர்வுப் பொருட்களாகப் பயன்படுத்திவரும் பிரதான நச்சுத்தனமான கலாசாரப் போக்கு தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இன்றைய வணிகமும் இலாபம் பெறும் அவாவும் கொண்ட சமூகச் சூழலில் இருந்து பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை எமது பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

எனவே பெண்களின் பாதுகாப்பினையும், அவர்களது பிரச்சினைகளையும், தீர்ப்பதற்கு யாவரும் ஒன்றிணைந்து முன்னெடுக்க முன்வரவேண்டும். அவர்களது நியாயமான கோரிக்கைகளை ஆண்களும் முதன்மையான ஒரு சமூகப் பொறுப்பாக ஏற்றுக் கொண்டு பெண்கள் மீதான சகல ஒடுக்கு முறைகளையும் ஒன்றிணைந்து எதிர்த்து நிற்க வேண்டும் என்பதை எமது பெண்விடுதலை சிந்தனை அமைப்பினர் வேண்டி கொள்கின்றனர்.

# சோமசுந்தரம் எழுதிய நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கலாபூஷணம், கலாநிதி குமாசாமி சோமசுந்தரம் எழுதிய "நல்லை நகர் நாவலர் பெருமான் வழியில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை உ.சந்திரகுமாரனும், வாழ்த்துரையை அகில இலங்கை இந்து மாமன்ற செயலாளர் மு.கதிர்காமநாதனும், தலைமையுரையை சு.செல்லத்துரையும், வெளியீட்டுரையை நாவலர் நற்பணி மன்ற தலைவர் ந.கருணை ஆனந்தனும் ஆற்றுவர்.

நூலின் முதற் பிரதியை திருமுறை நெறிச் செல்வர் வே.கனகசபாபதி பெற்றுக் கொள்வார்.

நூல் நயவுரையை திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் ந.விஜயசுந்தரமும், ஏற்பு ரையை நூலாசிரியர் கலாபூஷணம், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரமும், நன்றியுரையை பதிப்பாசிரியர் சைவத்திரு கா.சிலபாலனும் ஆற்றவுள்ளனர்.

எனவே இந் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ள வர்கள் சமுகமளிக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆற்றலைக்காட்டிலும் ஆர்வமே வெற்றிக்குக் காரணம்.
-சார்லஸ் பக்ஸ்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தோல்வி அரசியலைத் தொடருதல்

தமிழர்களாகிய எங்களுக்கு நேர்ந்த அழிவுகளும் அவலங்களும் பாரியவைதான். நாம் அதை நினைவுகூரும்போது, அத்தகைய அழிவும் அவலங்களும் இனியொருபோதும் எங்களுக்கு மட்டுமல்ல எவருக்கும் வரவேண்டாம் என்றுதான் நியாயமுள்ள மனதுக்கு நினைக்கத் தோன்றும்.

அதற்கு, அந்த நாளை, பழிவாங்கும் உணர்ச்சிகளையும் பகை வெறுப்பு ஆவேசத்தையும் மீண்டும் தூண்டிவிடும் விதமாக பயன்படுத்துவது சரியானதாக இருக்க மாட்டாது.

அரசியல் மற்றும் பழிதீர்க்கும் சுயதிருப்தி ஆதாயங்களுக்காக நமது மனங்களை ஆவேசப்படுத்துகிறவர்களிடமிருந்து விலகி, நடுநிலையோடும் நியாய உணர்வோடும் சிந்தித்தால் நமது சரி பிழைகளை நாமே அறிவோம்.

பிறரால் அழிக்கப்பட்ட நம்மவர்களை நினைக்கும் போது நம்மால் அழிக்கப்பட்ட பிறரையும் நம்மால் அழிக்கப்பட்ட நம்மவர்களையும் நினைப்பதைத் தவிர்த்துவிடுகிறோம் என்றால் நம்மிடமுள்ள அறஉணர்ச்சியை ஆவேசத்திற்குப் பின்னால் மறைக்கிறோம் என்பது புரியும்.

மனித உயிர்கள் எல்லாவற்றுக்குமாக நம்மால் இரங்க முடியவில்லை, ஏனைய அவலங்களை நம் மனதினுள் தேடமுடியவில்லை என்றால்... எமது சோகங்களை மட்டும் வைத்துக்கொண்டு நாம் இழந்தவைகளை மட்டும் சொல்லிக்கொண்டு, நமது எதிர்காலத்தை நேர்ப்படுத்திவிட முடியுமா என்பதை யோசிக்க வேண்டும்.

இப்படிச் சிந்திப்பவர்கள் சிங்களவர்க்குச் சார்பாகத்தான் சிந்திக்கிறார்கள்; நமது இழப்புகள் துயரங்களைப் பார்க்கவிடாமல் உலகின் பார்வையைத் திசைதிருப்புகிறார்கள் என்று பதற்றமுறுவது விவேகத்தின் பாற்பட்டதா பாமரத்தனத்தின் பாற்பட்டதா?

வன்முறையின் தோல்வியை இவ்வளவு குரூரமாக அனுபவித்த பிறகும், அதைவிட்டு வேறு வழிமுறைகளை யோசிக்க மாட்டாதவர்களாக அல்லது யோசிக்க விடாதவர்களாக இன்னும் பலர் இருப்பது ஒருவகையில் நம் சமூகத்தின் சாபக்கேடுதான்.

சிங்களவர்கள் தீர்வைத் தரமாட்டார்கள்; சிங்களவர்களோடு இணக்க அரசியல் சாத்தியமில்லை அது தோற்றுப்போய்விட்டது; உள்நாட்டுக்குள் பேச்சோ எதுவுமோ சரிவராது என்று முடிந்த முடிபாக அறிவித்துவிட்டு பகைவளர்க்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதில் என்ன அரசியல் சாதுரியமிருக்கிறது?

வெறுப்பை ஒருபோதும் வெறுப்பினால் சாந்தப்படுத்த முடியாது. பகையை பகையினால் வெல்வது சாத்தியமில்லை என்பதெல்லாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மனிதகுலம் அறிந்து கொண்டுவிட்டதுதான் என்றாலும், இன்னமும் வன்முறையை நியாயப்படுத்தக் கிடைக்கும் ஊகங்களையும் உணர்ச்சி வேகங்களையும் கொட்டி அழிவதிலேயே முனைப்பாயிருக்கிறோம் நாம்.

மிகப் பயங்கரமான சூழல் மாசு நம் மனங்களினுள்ளேதான் மறைந்து கிடக்கிறது. எமது அறியாமையிலும், ஆணவத்திலும், ஆத்திரத்திலும், அடையாளங்களை முன்னிறுத்தி ரோசப்படுவதிலும், பழிக்குப் பழி வாங்குவதிலும், பகை வளர்த்து அழிவதிலும் இதை வெளிப்படுத்தி வருகிறோம்.

காந்தி சொன்னது போல, திருப்பித் தாக்குவதுதான் உயிர் வாழ்வதற்கான நியதி என்று நம்புவது போல நடிக்கின்றோம். அந்த நடிப்பையே நம்பிக்கையாகக் காட்டி சமூகத்தின் அடுத்தகட்ட நகர்வைத் தாமதப்படுத்தி வருகிறோம்.

நம் சமூகத்தின் தீர்மானகர சக்தியாக இன்றுள்ளவர்கள், மக்களுக்கான வாழ்வைத் தேடித்தர வேறெந்த வழியையும் காண முடியாதவர்களாக உள்ளார்கள். தங்களது அந்த வங்குரோத்தை மறைப்பதற்காக வன்முறையையும், பகைவெறுப்பையும் மக்கள் மனங்களில் தூண்டிவிட்டு வருகிறார்கள்.

தோல்விகண்ட அதே எதிர்ப்பரசியலைத் தொடர்வதுதான் வழி. தவிர மற்றதெல்லாம் பணிந்து போதலே என்று சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள், உசார் மடையர்களாக்குகிறார்கள்.

வன்முறையின் பலவீனத்தையும், மனிதவிரோத பிற்போக்குத் தன்மையையும் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக உணர்ந்துகொள்ளாமல் நம் வாழ்வுக்கு வழிகாண முடியாது.

- ஆசிரியர்

# மீளவும் புலிகள் தலையெடுப்பதாக பொய்யான பிரசாரம் முன்னெடுப்பு

## ஊடகத்துறை பிரதி அமைச்சர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் நாட்டில் மீள உருவாகின்றனர் என்ற பொய்யான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஊடகத்துறை பிரதி அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே அவர் இதனை குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது வடக்கு, கிழக்கு, தெற்கு என நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது. இதனை ஏற்படுத்துவதற்கு 23000 இராணுவத்தினர் தமது உயிர்களைத் தியாகம் செய்தனர். மேலும் 27000 படையினர் தமது அங்கங்களை இழந்து ஊனமடைந்தனர். ஆகவே இத்தகைய இழப்பின் மத்தியில் பெற்றுக் கொண்ட வெற்றியினை நாம் மறந்துவிட முடியாது. நாம் தற்போது புதிய பாதையில் பயணிக்கின்றோம். எமது தேசிய பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. நாட்டில் மீண்டும் புலிகள் உருவாகுவார்கள், பிரிவினைவாதம் தலைதூக்கவுள்ளது என பொய்யான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம் என பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்கள் மத்தியில் ஐக்கியத்தையும்,நல்லுறவையும் ஏற்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது. ஆகவே இதனை இலக்காகக் கொண்டு ஏனைய சக்திகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். வடக்கில் பிரிவினைவாதம் ஏற்பட்டாலும் தெற்கில் பிரிவினைவாதக் கருத்துக்கள் எழுந்தாலும் இவர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அந்த விடயத்தில் எமது அரசாங்கம் கண்டிப்புடன் நடந்து கொள்ளும் என்பதே யதார்த்தம்.

மேலும் அரசியல் அமைப்பின் 20 ஆவது திருத்தத்தினை தித்தனை தோற்கடிப்பதற்கு பலரும் முயற்சி செய்து வருகின்றனர். ஆனாலும் இதனை முறியடித்து நாம் திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவோம். தேர்தல் முறை மாற்றத்திற்கு சிறுபான்மைக் கட்சிகள் ஆதரவு வழங்கியுள்ளன. ஆகவே எந்தப் பகுதியினருக்கும் பாதிப்பின்றி இந்த மாற்றம் முன்னெடுக்கப்படும். வடக்கு முதலமைச்சர் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தால் அது தவறானது. ஆனால் அவ்வாறான தகவல் எமக்கு கிடைக்கவில்லை. ஆனால் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என்பது அது ஒரு ஆன்மிக கடமையாகும்.

மேலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. தற்போது பல உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட் காலம் நிறைவடைந்துள்ளது. மேலும் இந்த வருட இறுதிக்குள் ஏனைய மன்றங்களினது ஆயுட் காலங்களும் நிறைவடைந்துவிடும். இந்த நிலையில் பொதுத் தேர்தலை நடத்திய பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

# திறந்த வெளி சிறைகளால் வருடாந்தம் 4மில். வருமானம்

திறந்தவெளி சிறை முகாம்களின் ஊடாக வருடாந்தம் 400 இலட்சம் ரூபா வருமானம் ஈட்டப்படுவதாக சிறைச்சாலை ஆணையாளர் என்.டி. ஆர். புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருமானம் சிறைக் கைதிகளின் உணவு மற்றும் சிறைச்சாலை பராமரிப்புப் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

பல்லேகல, வீரவில,பதுளை,கல்தென ஆகிய இடங்களில் திறந்தவெளி சிறை முகாம்கள் செயற்பட்டு வருகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக குருவிட்ட, தங்காலை, அநுராதபுரம் ஆகிய சிறைச்சாலைகளிலும் திறந்தவெளி சிறை முகாம்கள் இயங்கி வருகின்றன.

மரக்கறி பழச் செய்கைகள் மற்றும் உர உற்பத்தி போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இந்த திறந்தவெளி சிறையின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

நாடு முழுவதிலும் உள்ள ஏனைய சிறைகளிலும் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் புஸ்பகுமார மேலும் தெரிவித்தார்.

# முன்னாள் அமைச்சர் பசில் மீது மற்றொரு குற்றச்சாட்டு

முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்ஷவின் மீது மீண்டும் ஒரு பாரதூரமான குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவர் அரச நிதி சட்டங்களை மீறி மகிந்த அரசுக்கு புகழ்பாட ஒரு தனியார் ஊடகத்திற்கு பல மில்லியன் அரச பணத்தை வழங்கியிருப்பதை பொலிஸ் விஷேட பிரிவு கண்டு பிடித்துள்ளது.

தற்போது இந்த ஊடகத்தின் உரிமையாளர் வெளிநாடொன்றிற்கு தப்பிச் சென்று விட்டதாகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் நலனுக்காக ஒதுக்கப்பட்ட பல மில்லியன் ரூபா பணத்தை இவர் அமைச்சரவைக்குத் தெரியாமல் குறித்த ஊடகத்திற்கு வழங்கியுள்ளமை தொடர்பான தகவல்கள் கசிந்துள்ளன.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக மேலும் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# 12 பொலிஸ் அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்ற உத்தரவு

12 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் அனுமதியுடன் இவர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கொட்டாஞ்சேனை, மாங்குளம், கொம்பனித்தெரு, தலைமன்னார், மன்னார், நாரம்மல, கொபெய்கனே ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர இரட்டைபெரியகுளம், முள்ளியவளை, குளியாப்பிட்டி, பன்வில, தும்மலசூரிய ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

# 19இன் கீழான அரசியலமைப்பு இம் மாதத்திற்குள் அமையும்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

19ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தின் கீழ் அரசியல் அமைப்பு சபை விரைவில் அமைக்கப்படும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன் கீழ் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு நியமனங்களும் வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பு சபையில் சபாநாயகர், பிரதம மந்திரி, எதிர்க்கட்சித்தலைவர் உட்பட்ட 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மூன்று சுயாதீன உறுப்பினர்களும் உள்ளடங்குவர்.

இந்தநிலையில் இந்த மாத இறுதிக்குள் அரசியலமைப்பு சபை ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மே 2009இல் எல்.ரீ.ரீ.ஈ யின் இராணுவ தோல்வி - 4

டி.பி.எஸ் ஜெயராஜ்





**ஒரு கட்டாய சூதாட்டக்காரனைப் போல, பிரபாகரன் தமிழீழம் என்கிற கைக்கு எட்டாத இலக்கினுக்காக இலங்கையின் துடிப்பான இனமான தமிழ் மக்களின் முழு இருப்பையுமே ஆபத்துக்குள்ளாக்கினார். கிடைத்தால் எல்லாம் இல்லையேல் ஒன்றுமில்லை என்பதைப் போன்ற சூதாட்டம் அவருடையது.**

பிரபாகரன் சற்று வளைந்து கொடுத்திருந்தால் அவர் இரகசியமாக வன்னி மற்றும் மணலாறு காடுகளுக்குச் சென்றிருக்க முடியும் அல்லது கடல் வழியாக தென் கிழக்கு ஆசியாவுக்குச் சென்றிருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

வெளிப்படையாக புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இராணுவ பாதுகாப்புகளை அழிக்கும் பாரிய எதிர்தாக்குதல் திட்டத்தை அவர் பெரியளவு நம்பியிருந்தார். ஆனால் 2009 ஏப்ரல் 4 மற்றும் 5இல் ஆனந்தபுரத்தில் ஏற்பட்ட இராணுவ தோல்வியின் விளைவாக வட பிராந்திய படைத் தளபதி கேணல். தீபன் உட்பட 623 உறுப்பினர்கள் உயிரிழந்ததினால் இந்த திட்டம் பாழானது. இந்த எழுத்தாளர் அப்போது எழுதிய பத்திகளில் ஆனந்தபுரம் தோல்வியில் இருந்து எல்.ரீ.ரீ.ஈ யினால் மீண்டு வரமுடியாது மற்றும் யுத்தத்தைப் பற்றி வரையறை செய்யும் தருணம் இதுதான் என்று எழுதியிருந்தார். இறுதியாக அந்த அவதானிப்பு சரியானது என்று நிரூபணமாகியது.

ஆனந்தபுரத்திற்கு ஆறு வாரங்களின் பின்னர் இறுதி யுத்தம் மே மாத நடுப்பகுதியில் வந்தது. ஒரு சுற்றிவளைப்புக்கு உட்பட்டிருந்த பிரபாகரன் மற்றும் அவரது மூத்த புலி உறுப்பினர்கள் யோசனைகளை பெறுவதற்காக ஒரு கூட்டுக் குழு அமர்வினை நடாத்தினார்கள். ஒரு துணிகர முத்தரப்பு முயற்சி மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. பிரபாகரன் உட்பட புலிகளின் ஒரு குழுவினர் அடைபட்டுள்ள நிலைகளிலிருந்து வெளியேறி ஏரியை கடந்து ஏ -35 நெடுஞ்சாலை எனப்படும் பரந்தன் முல்லைத்தீவு பாதையை அடைவது. அதன்பின்னர் புலிகள் பரந்த வன்னிக் காடுகளுக்குள் நகர்ந்து அங்கிருந்து செயற்படுவது. சிலர் கிழக்குக்கும் நகர்வது. ஒரு இரண்டாவது குழு புலிகள் இராணுவத்தை சந்தித்துப்பேச்சு வார்த்தை நடாத்தி சரணடைவது. அதன் பிரதான இலக்கு காயமடைந்துள்ள உறுப்பினர்கள், குடும்ப அங்கத்தவர்கள், பொதுமக்கள் ஆகியோருக்குத் தேவையான அவசர மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவது ஆகும். மூன்றாவது குழு கடுமையான பின்புற பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது. புலிகளின் கடைசியாக போரிடும் அவசரபடைப் பிரிவிற்கு தலைமையேற்றவர் வேறு யாருமல்ல பிரபாகரனின் மூத்த மகனான சாள்ஸ் அன்ரனிதான். அவருக்கு கிழக்கின் விசேட தளபதி ரமேஸ் உதவியாக இருந்தார்

மே 17 ஞாயிறு நள்ளிரவுக்குச் சற்று பின்னர் ஆயுதப் படையினர் மீது எல்.ரீ.ரீ.ஈ கடுமையான தாக்குதலைத் தொடுத்தது. அந்த தாக்குதல் மூன்று பகுதிகளில் இருந்து மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பிரதானமாக 53ஆம் படைப்பிரிவு பிடித்திருந்த நந்திக்கடலேரியின் திசையை நோக்கியே மேற்கொள்ளப்பட்டது. பானுவின் தலைமையின் கீழ் மோசமான யுத்தம் நடைபெறுகையில் மூன்று படைப் பிரிவுகளும் உடைத்துக் கொண்டு புறப்பட்டன. ஜெயம் தலைமையில் ஒன்றும், பொட்டு அம்மான் தலைமையில் ஒன்றும் சூசை தலைமையில் மற்றொன்றும். மூன்று படைப் பிரிவுகளிலும் மொத்தமாக 250 - 300 பேர்வரையில் இருந்தார்கள். அநேகமாக அனைத்து இராணுவ தலைவர்களும் வெளியேற முயலும் இந்த மூன்று படைப் பிரிவிலும் இடம்பெற்றிருந்தார்கள், அதே வேளை மொத்தமாக இருந்த அரசியல் பிரிவினர் அனைவரும் சரணடைவதற்காக பின்னால் நின்றிருந்தார்கள்.

மிக அதிக எண்ணிக்கையிலான கரும்புலிகள் இந்தத் தாக்குதலில் இறந்தார்கள், வெடிமருந்தைக் கட்டிய இளைஞர்கள் மற்றும் யுவதிகள் இராணுவ நிலைகளின்மீது பாய்ந்து தங்களை வெடிக்க வைத்துக் கொண்டார்கள். இந்த இடைவெளி புலிகளுக்கு இராணுவ சுற்றிவளைப்பை ஊடுருவ உதவியது. புலிகள் 53 ஆவது பிரிவின் பாதுகாப்பை புலிகள் கடந்தபோதிலும் இராணுவத்தினர் தீவிரமான பீரங்கித் தாக்குதலை மேற்கொள்ள ஆரம்பித்தனர், அதில் பலர் இறந்தார்கள். மேலும் இராணுவம் பின்புறத்தில் அதிக ஆட்களைக் கொண்டு பல அடுக்கு பாதுகாப்புகளை அமைத்திருந்தது. சிறிது தூரத்துக்கு உடைத்துக் கொண்டு வெளியேறிய எல்.ரீ.ரீ.ஈயினர் இதற்கு இடையில் சிக்குண்டார்கள். இந்தத் தாக்குதல் தோல்வியடைந்ததின் விளைவாக அநேக புலிகள் சுற்றி வளைக்கப்பட்டார்கள், பல எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் சயனைட்டை உட்கொள்ள ஆரம்பித்தார்கள். இதேபோல சாள்ஸ் அன்ரனி தலைமையில் புறப்பட்ட புலி பாதுகாவலர்களும் தோற்கடிக்கப்பட்டார்கள் அதில் உயிர் பிழைத்தவர்கள் பிடிபடுவதை தவிர்ப்பதற்காக சயனைட்டுகளை விழுங்கினார்கள். பின்னர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சாள்ஸ் அன்ரனி இறந்து கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

சூசை தலைமையில் வெளியேறிய குழு இராணுவ சுற்றிவளைப்பை உடைப்பதில் ஆரம்பத்தில் வெற்றியீட்டியது. பிரபாகரன் இந்தக் குழுவில் இருந்தார். அவர்கள் நந்திக் கடலேரி புதர்களில் மறைந்திருந்தார்கள். பிரபாகரன் சூசையிடமிருந்து பிரிந்து இரவில் கடலேரியை கடந்து மே 18 அதிகாலையில் காடுகளைப் பாதுகாப்பாக அடைவதற்கான ஒரு ஆபத்தான பணியை மேற்கொண்டார். ஒரு காலத்தில் மெய்ப்பாதுகாவலர்களாக நூற்றுக்கணக்கான அங்கத்தவர்கள் சூழ்ந்து இருந்த பிரபாகரனுக்கு முள்ளிவாய்க்காலின் இறுதிக் கட்டத்தில் உயரடுக்கு போராளிகள் 18 பேர் மட்டுமே துணையாகச் சென்றார்கள்.

ஆனால் எல்.ரீ.ரீ.ஈயின் எதிர்பார்ப்புகள் யாவும் அந்த துரதிருஸ்டமான நாளில் பொய்யாகிப் போய்விட்டது. பிரபாகரனின் உடல் செவ்வாய் அதிகாலை பொழுது விடிவதற்கு முன்னரே கண்டு பிடிக்கப்பட்டது. 54 வயதான எல்.ரீ.ரீ.ஈ உயர்மட்ட தலைவரின் உடல், மே 19, செவ்வாய் அன்று நந்திக்கடல் என அழைக்கப்படும் முல்லைத்தீவு கடலேரிக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டது. அவரது தலையிலும் மற்றும் நெற்றியிலும் துப்பாக்கிச்சூட்டு காயங்கள் காணப்பட்டன. லெப். கேணல் ரோகித்த அலுவிகார தலைமையிலான 4 ஆவது விஜயபாகு காலாட்படை பிரிவைச் சேர்ந்த வீரர்கள் அதைக் கண்டுபிடித்ததுக்கு உரிமை கோரினார்கள். ஒருகாலத்தில் எல்.ரீ.ரீ.ஈயின் அரசியல் மூலோபவியலாளரான அன்ரன் ஸ்ரனிஸ்லாஸ் பாலசிங்கத்தினால் தமிழ் ஈழத்தின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இரண்டும் இவரே என வர்ணிக்கப்பட்ட மனிதரின் வாழ்வு இப்படியாக முடிவடைந்தது. இராணுவ தளபதி சரத் பொன்சேகா 19 ஆம் திகதி பி.ப 12.15 மணியளவில் உத்தியோகபூர்வமாக அந்த மரணத்தை அறிவித்தார்.

குறுகிய காலத்துக்கு மட்டும் நிலைத்திருக்கும் அதிகாரத்தின் இயல்பினை பிரபாகரன் மரணம் தெளிவாக எடுத்துக் காட்டியது. ஒருவேளை உலகத்திலேயே அதிக பலம் பொருந்தியதாக கருதப்படும் கெரில்லா அமைப்பினை அவர் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார், மற்றும் சூரியதேவன் எனும் தெய்வீக அந்தஸ்தை அவருக்கு முகஸ்துதிபாடும் அவரது பின் தொடர்பாளர்கள் அவருக்கு வழங்கியிருந்தார்கள். அவரது மரணத்துக்கான சூழ்நிலை வாழ்க்கையில் சாதாரணமாக சர்ச்சையினை தோற்றுவித்துள்ளது.

தனது போராளிப் பாத்திரத்தை வெறும ஒரு ஒற்றைக் கைத்துப்பாக்கியுடன் ஆரம்பித்த பிரபாகரன், காலப்போக்கில் எல்.ரீ.ரீ.ஈயின்னை ஒரு சக்திவாய்ந்த இயக்கமாக கட்டியெழுப்பியதுடன் ஒரு நிழல் அரசாங்கத்தை நடாத்தியது மாத்திரமன்றி தமிழ்த்தேசியத் தலைவர் என்கிற அந்தஸ்தையும் பெற்றார். இருந்தும் விட்டுக்கொடுப்புக்கான விருப்பமின்மையால் அல்லது இயலாமையின் விளைவினால் பிரபாகரன் தனது இயக்கம், குடும்பம் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக அவரது வாழ்க்கை முழுவதையுமே ஒரு பரிதாபகரமான முறையில் இழந்துள்ளார்.

ஒரு கட்டாய சூதாட்டக்காரனைப் போல, பிரபாகரன் தமிழீழம் என்கிற கைக்கு எட்டாத இலக்கினுக்காக இலங்கையின் துடிப்பான இனமான தமிழ் மக்களின் முழு இருப்பையுமே ஆபத்துக்குள்ளாக்கினார். கிடைத்தால் எல்லாம் இல்லையேல் ஒன்றுமில்லை என்பதைப் போன்ற சூதாட்டம் அவருடையது. படையெடுத்து வந்த ஒரு இராணுவ ஜெனரல் தனது வீரர்களுக்கு வெற்றிக்காக போராடுவது அல்லது மரணத்தை எதிர்கொள்வது என்பதைத் தவிர வேறு தெரிவு இருக்கக்கூடாது என்பதற்காக தனது படகுகள் அனைத்தையும் எரித்தாராம். பிரபாகரனும் அதே நிலையில் இருந்தார். திரும்பிச் செல்வதில்லை. வீரர்கள் யுத்தத்தில் வெற்றி பெற்றால் ஜெனரலின் உறுதியான தீர்மானத்துக்காக அவர் பாராட்டுப் பெறுவார். அவர்கள் தோற்றால் அந்தக் கதையை வெளியே சொல்வதற்கு யாரும் இருக்க மாட்டார்கள்.

இறுதியாக அதுதான் நடந்தது. பிரபாகரன் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ இப்போது இல்லை, ஆனால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட திருப்பிச் செலுத்த முடியாத தீங்கு "அவர்களுக்குப் பின்னும் வாழுகிறது"

(முற்றும்)



# படையினரிடம் சரணடைந்த 110 பேரின் நிலைதான் என்ன?

## கேட்கிறார் யஸ்மின் சூகா



இலங்கை அரச படையினரிடம் சரணடைந்த 110 பேரைக் காணவில்லை என ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட இலங்கை நிபுணர் குழுவில் அங்கம் வகித்தவர் யஸ்மின் சூகா.

காணாமற் போன 110 பேர் பற்றிய தகவல்கள் சூகாவின் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இலங்கை அரச படையினரிடம் சரணடைந்து பின்னர் காணாமற் போன 110 பேர் பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி நூற்றுக் கணக்கான தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ மற்றும் சிவில் நிர்வாகத் தலைவர்கள் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்ததனை பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நேரில் கண்டுள்ளனர்.

எவ்வாறெனினும், படையினரிடம் சரணடைந்த பெரும் எண்ணிக்கையிலான புலி உறுப்பினர்கள் பின்னர் காணாமற் போயுள்ளதாக நேரில் கண்ட சாட்சிகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தபோதே அவர்களை இறுதியாகக் கண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சாட்சியங்கள் தற்போது இலங்கைக்கு வெளியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலவந்தமான காணாமற் போதல் தொடர்பில் நம்பகமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பின் சார்பில் யஸ்மின் சூகா கோரிக்கை விடுத்துள்ளார்.

# கைது செய்வதைத் தடுக்க அடிப்படை உரிமை மீறல் மனு

(கொழும்பு)

எந்தவொரு சட்ட அடிப்படையும் அற்ற நிலையில் தன்னை கைது செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதனைத் தடுக்க இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி, நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸினால், உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி மனுவில், பொலிஸ் மா அதிபர், பொலிஸ் நிதி மோசடிப் பிரிவின் பணிப்பாளரான பொலிஸ் அத்தியட்சகர் மெவன் சில்வா, அப்பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சட்ட மா அதிபர், ஆகியோர், பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிக்கு நெருக்கமான தனக்கு எதிராக அரசியல் வேட்டையொன்று முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் ஆலோசனைக்கமைய தன்னை கைது செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ரவி விடுதலை



செலாவணி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கு தொடர்பான தீர்ப்பு நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ளது.

ராஜ் ராஜரட்ணமும் கலன் இன்டர்நஷனல் மாஸ்டர் ப·.ண்ட் நிறுவனமும் அனுப்பிய மூன்று மில்லியன் அமெரிக்க டொலரை மத்திய வங்கியின் அனுமதியின்றி, அவர்களின் சார்பில் ஸ்ராண்டர்ட் சார்ட்டட் வங்கியின் கிருளப்பனை கிளையில் வைப்பில் இடுவதற்கு ரெக்ஷியா கோப்பரேட் நிறுவனத்திற்கு உதவியும், ஒத்தாசையும் புரிந்ததாக ரவி கருணாநாயக்க மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத்திற்கு முன்பாக மண்டியிட்ட முன்னைய அரசாங்கங்கள்


## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு

முன்பு இருந்த அனைத்து அரசாங்கங்களும் பயங்கரவாதத்திற்கு முன் மண்டியிட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒரு ஜனாதிபதி இந்திய இராணுவத்தை வரவழைத்து சமாதான உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டு வடக்கு, கிழக்கை இந்தியாவிடம் ஒப்படைத்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதற்கு அடுத்து வந்த ஜனாதிபதி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி, 600 பொலிஸ் அதிகாரிகளை காட்டிக்கொடுத்து, ஆயிரக்கணக்கான மக்களைக்கொன்று குவித்து புலிகளை வலுப்பெறச்செய்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பு விகாரமகா தேவி பூங்காவில் நடைபெற்ற யுத்த வெற்றி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த



ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை தன் மீது இருக்கும் வெறுப்பினால் நாடு பெற்றுள்ள வெற்றியை இழக்க இடமளிக்க வேண்டாம் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு எச்சரிக்கை விடுக்கும் சு.க.

பொலிஸ் நிதி மோசடிப்பிரிவை ஏற்படுத்தியவர்கள் எதிர்காலத்தில் தாம் ஆட்சிக்கு வந்தபின் அதற்கு முகங்கொடுக்க வேண்டி வரும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு (FCID) மற்றும் கோத்தாபய ராஜபக்ஷ குறித்து இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சுசில் பிரேமஜயந்த, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் கருத்து வெளியிட்டனர்.

FCID தொடர்பில் பிரதமர மீது மாத்திரம் ஏன் குற்றம் சுமத்தப்படுகிறது ஜனாதிபதிக்கு தொடர்பு இல்லையா என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

ஜனாதிபதி சில விடயங்களை அறிந்துள்ளதாகவும் ஆனால FCID தொடர்பில் தமக்கு வாக்குறுதி அளித்துள்ளதாகவும் பதில் அளித்துள்ளனர்.

கோத்தாபய ர்ஜாக்ஷ தொடர்பான வழக்கு குறித்து பிரதமர ரணில் விக்கிரமசிங்க பொதுநலவாய அமைப்பின் உதவியை கோருவது அநாவசியமற்றதெனவும் அது இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பை தரம் குறைத்து சட்டத்தரணிகளை அச்சுறுத்தும் செயற்பாடு என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# நேபாள நிவாரணப்பணி படையினருக்கு பாராட்டு



நேபாளத்தில் இடம் பெற்ற நிலநடுக்கத்தை அடுத்து அங்கு நிவாரண பணிகளுக்காக சென்ற இலங்கை படையினர் தொடர்பாக தாம் பெருமை கொள்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை அலரிமாளிகையில் வைத்து, நேபாள நிவாரண பணிகளில் ஈடுபட்ட குழுக்களை கௌரவித்து, பாராட்டி சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இவ்வாறான அவசர நிலைமைகள், மற்றும் அயல்நாடுகளின் தேவைப்பாடுகளை உணர்ந்து செயற்படுவதில் இலங்கையர்கள் முன்னிற்பதாக தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பில் முபபடைகளுக்கும் உள்ள அர்ப்பணிப்பு வலய நாடுகளின் பாதுகாப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும். அயல்நாடுகளில் இலங்கை படையினர் தொடர்பாக உள்ள கௌரவத்தை மேலும் உயர்த்தும் வகையில் இந்த நிவாரணப் பணிகள் இடம்பெற்றதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச ரீதியாக தீவிரவாதத்தை மட்டுப்படுத்துவதற்கு இலங்கை படையினருக்கும் பொறுப்பு இருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து நாங்கள் பெருமையடைய முடியும். உலகம் தற்போது இது தொடர்பில் பேசுகின்றது.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக இலங்கைப்படையினரின் எதிர்காலம் தொடர்பில் சந்தேகம் நிலவியது.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அந்த நிலை மாற்றப்பட்டதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

# கோத்தாவின் வழக்கு தீர்ப்பு விடயங்களை மறைத்த ரணில் விசனம் தெரிவிக்கும் நிமல்

கோத்தாபய ராஜபக்ஷவின் வழக்கு தீர்ப்பு தொடர்பில் எதிர்ப்பை வெளியிடும் போது பிரதமர் பல விடயங்களை மறைத்து விட்டதாக எதிர்க் கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது,

கோத்தாபய ராஜபக்ஷ இது தொடர்பில் உயர் நீதி மன்றத்திற்கு சென்றார், 126 ஆவது பிரிவின் பிரகாரம் வழக்குத் தாக்கல் செய்ய அதிகாரம் உள்ளது உயர்நீதிமன்ற நீதியரசர்களுக்கு இது தொடர்பில் தீர்ப்பு வழங்க முடியும் என 126 ஆவது பிரிவில் காணப்படுகின்றது; இதனடிப்படையில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கில் நீதியும் நியாயமுமானதாக உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும் எந்தவொரு நிவாரணத்தையும் வழங்க நீதி மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. இந்தத் தீர்ப்பிற்கு பின்னர் ரணில் விக்கிரமசிங்க குழப்பமடைந்தார். என அவர் தெரிவித்தார்.

# கொமர்ஷல் வங்கிக் கிளை திறக்காவிட்டால் பருத்தித்துறையில் கணக்குகள் முடக்கப்படும்

## வர்த்தகர் சங்கம் அறிவிப்பு

பருத்தித்துறை நகரில் கொமர்ஷல் வங்கிக்கிளை ஒன்று விரைவில் திறக்கப்பட வேண்டும் என பருத்தித்துறை வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ்.பத்மநாதன் கூறியுள்ளார்.

வடமராட்சியில் உள்ள பத்திரிகையாளர்களை, வர்த்தகர் சங்கக் கூட்டத்தில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இருந்தே நாம் இந்தக் கோரிக்கையை முன் வைத்து வந்தோம். ஆனால் வங்கிக் கிளையைத் திறப்பதாகத் தெரிவித்தார்களே தவிர கிளையைத் திறக்கவில்லை. எமது சங்கத்தில் உள்ள வர்த்தகர்கள் நீண்ட தூரம் சென்று நெல்லியடியில் உள்ள வங்கிக் கிளையிலேயே பணத்தை வைப்பிலிட வேண்டிய நிலையுள்ளது.

எனவே ஒரு மாத காலத்திற்குள் பருத்தித்துறையில் கொமர்ஷல் வங்கி திறக்கப்படாவிடின் அவ்வங்கியில் உள்ள தமது கணக்குகளை முடக்கிவைக்க வேண்டிவரும் எனத் தெரிவித்துள்ள அவர்.

முன்னர் வல்வெட்டித்துறையிலும் கொமர்ஷல் வங்கிக் கிளை ஒன்று திறக்க முயற்சி எடுக்கப்பட்டு பின்னர் அது கைவிடப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

# வாழைக்குலைத் திருட்டு புன்னாலைக்கட்டுவனில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - புன்னாலைக் கட்டுவன் தெற்கு ஆயக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள வாழைக் குலைத தோட்டமொன்றில் அண்மைக் காலமாக இரவு நேரங்களில் கப்பல் வாழைக் குலைகள திருட்டுப் போவதாகத் தோட்ட உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

கந்தசாமி கணேசமுருகன் என்ற விவசாயிக்குச் சொந்தமான தோட்டத்திலேயே அடிக்கடி இவ்வாறான திருட்டுச் சம்பவம் இடம்பெறுகிறது.

இதனால் புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்திலுள்ள ஏனைய வாழைக் குலைத் தோட்டக்காரர்களும் அச்சமடைந்துள்ளனர்.

# பாலஸ்தாபனம்

(புலோலி)

தென்புலோலி வெளியவளவு அருள்மிகு வீரபத்திரர் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது.

இவ் ஆலயத் திருப்பணி வேலைகள் சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (01)

# ஹாட்லிக் கல்லூரி மாணவன் சாதனை



அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச விஞ்ஞான பொறியியல் கண்காட்சி (2015) இல் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் இளம் கண்டுபிடிப்பாளர் செல்வன் சிவதாசன் மகேந்திரன் பங்குபற்றிச்சாதனை நிலை நாட்டியுள்ளார்.

இச் சர்வதேச விஞ்ஞான பொறியியல் கண்காட்சி அமெரிக்காவில் கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இலங்கைப் பொறியியலாளர் நிறுவனம் இவரை இக்கண்காட்சியில் பங்குபற்ற அனுப்பிவைத்துள்ளது. இலங்கையிலிருந்து அனுப பிவைக்கப்பட்ட ஐந்து இளம் கண்டுபிடிப் பாளர்களில் இவர் மட்டுமே ஒரேயொரு தமிழ் இளம்கண்டு பிடிப்பாளராவார்.

இவர் ஹாட்லிக்கல்லூரியில் கட்பாதுகாப்பான மின் சிக்கன விளக்கைக் கண்டுபிடித்து சாதனை நிலைநாட்டியிருந்தார். இச் சர்வதேச விஞ்ஞான பொறியியல் கண்காட்சியில் 70 நாடுகளைச் சேர்ந்த 1700 இளம் கண்டு பிடிப்பாளர்கள் பங்குபற்றியிருந்தனர். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 11 ஆம் ஆண்டில் கல்விகற்கும் இவர் புலோலி சேர்ந்த மகேந்திரன் தம்பதியினரின் புத்திரருமாவார். (01)

# சட்டவிரோத மீன்பிடி கண்டித்து கவனயீர்ப்பு போர்

(முல்லைத்தீவு)

சட்டவிரோத மீன்பிடியை தடுக்கக் கோரி நேற்றைய தினம் கடற்றொழிலுக்கு தொழிலாளர்கள் செல்லாது முல்லைத்தீவில் கடற்றொழிலாளர்கள் கவனயீர்ப்புப் போராட்டமொன்றினை நடாத்தினர். முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் மற்றும் மாவட்ட கடற்றொழிலாளர்களின் கிராமிய அமைப்புகளின் சம்மேளனம் ஆகியன இணைந்து இக்கவனயீர்ப்புப போராட்டத்தினை நடாத்தியுள்ளன.

முல்லைத்தீவு கடற்பரப்பில் நடைபெறுகின்ற சட்டவிரோத கடற்றொழில்கள் மற்றும் வெளி மாவட்ட கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய! மீன்பிடிகளை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் கட்டுப்படுத்த தவறுகின்றமை போன்ற பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பினை வெளிக்காட்டும் வகையில் கடற்றொழிலாளர்களினால் காலை 8.30 மணியளவில் மாவட்ட நீரியல் வளத்திணைக்களத்திற்கு முன்பாக இக்கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. (160,125)






# பகலிரவு டெஸ்ட் போட்டிகள் பரிந்துரை செய்கிறது ஐ.சி.சி

International Cricket Council

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளை பகல் இரவு ஆட்டமாக நடாத்த முயற்சிக்குமாறு, டெஸட் விளையாடும் நாடுகளுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) பரிந்துரைத்துள்ளது.

அனில் கும்ளே தலைமையிலானை ஐ.சி.சி.யின் கிரிக்கெட் சபை பல்வேறு மாற்றங்கள செய்வது குறித்து ஆலோசித்தது. அதில் எடுக்கப்பட்ட முடிவுகள், பரிந்துரைகள் குறித்து ஐ.சி.சி விடுத்த அறிக்கையில்,

டெஸ்ட் போட்டிகளை மாலை வேளைகளில் நடத்த வேண்டும் என்று அனில் கும்ளே தலைமையிலான குழு பரிந்துரைத்துள்ளது. இதை டெஸ்ட் ஆடும் நாடுகள் முயற்சித்துப் பார்க்கலாம். அதே நேரத்தில் டெஸ்ட் போட்டியை ஐந்து நாட்களுக்கும் குறைவாக நடாத்த ஆதரவு இல்லை.

மேலும் இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. துடுப்பு மட்டையின் அளவு விடயத்தில் எந்த ஒழுங்குமுறையும் வரையறுக்கப்படவில்லை.

உலகில் உள்ள ஒவ்வொரு மைதானத்திலும், பவுண்டரி எல்லை முடிந்தவரை அதிகரிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று குழு பரிந்துரைத்துள்ளது.

விக்கெட் விழுந்ததும் துடுப்பாட்ட வீரர்கள் களத்தை விட்டு வெளியேறுவதில் தாமதம் ஏற்படாமல் இருக்கும் வகையில், எந்தெந்த நோபோல்களை சரி பார்க்க வேண்டும் என்பது குறித்து ஆய்வு செய்யவேண்டும் என பரிந்துரைத்துள்ளது.

களத்தில் தகாத முறையில் நடந்து கொள்ளும் வீரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், உடல் ரீதியாக மோதிக் கொண்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கும் வகையில், அபராதத்துக்குப் பதிலாக இடை நீக்கம் செய்யவும் ஆதரவு தெரிவிக்கப் பட்டுள்ளது.

தொடர்ந்து தாமதமாகப் பந்து வீசும் அணித்தலைவருக்கு, அடுத்த ஆட்டத்தில் விளையாட தடை விதிப்பதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

மேலும், நடுவரின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யும விவகாரம், முறையற்ற பந்து வீச்சு, வீரர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தரமான தலைக்கவசங்களை தயாரிப்பது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்தும் ஆலோசிக்கப் பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் பட்டம் வென்றார் ஜோகோவிச்



(ரோம்)

இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் உலகின் நம்பர் 1 வீரராக உள்ள நோவன் ஜோகோவிச் பட்டம் வென்றார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் தர வரிசை பட்டியலில் 2 ஆவது இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரருடன் ஜோகோவிச் மோதினார்.

இதில் 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் பெடரரை வீழ்த்திய ஜோகோவிச் நான்காவது முறையாக இத்தாலி ஓப்பன் போட்டியில் பட்டம் வென்றார்.

அதே போல் தொடர்ந்து 22 ஆவது வெற்றியையும் பெற்று சாதனை படைத்தார். இப் போட்டியில் 15 முறை கலந்து கொண்ட போதும் ஒரு முறை கூட பெடரர் பட்டம் வெல்ல வில்லை என்பது குறிப்பிடத் தக்கது

# 2 ஆம் இடத்தில் ஷரபோவா



ரஷ்ஷயாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனையான மரியா ஷரபோவா ரோம் மாஸ்டர்ஸ் சாம்பியன் பட்டத்தை வென்றதன் மூலம் 2 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

உலக ரென்னிஸ் சம்மேளனம் ரென்னிஸ் தர வரிசைப் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதில் மரியா ஷரபோவா 7710 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்திற்கு முன்னேறினார்.

இவரிடம் தோல்வியடைந்த கார்லா சுவாரஸ் முதன்முறையாக 8 ஆவது இடத்திற்கு முன்னேறினார். சுவாரசுக்கு எதிரான அரையிறுதியில் தோல்வியடைந்த ரோமானியாவைச் சேர்ந்த சிமோனா ஹாலேப் 2 ஆவது இடத்திலிருந்து 3 ஆவது இடத்திற்கு பின்தங்கினார். செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார்.

# இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக ஜஸ்டின் லாங்கர்?

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளர் பதவிக்கு அவுஸ்ரேலியாவின் ஜஸ்டின் லாங்கர் நியமிக்கப்படாலம் என தெரியவந்துள்ளது.

பயிற்சியாளர் பிளட்சரின் ஒப்பந்த காலம் முடிவடைந்ததுடன், வெளிநாடுகளில் அவரின் செயற்பாடு மோசமாக இருந்ததால் அவர் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். எனவே அடுத்த பயிற்சியாளரை நியமிக்கும் நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது கிரிக்கெட் சபை.

முன்னாள் கப்டன்களான கங்குலி, டிராவிட் ஆகியோரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என கூறப்பட்டது. ஆனால் தற்போது வெளிவந்துள்ள தகவலின் படி அதற்கான வாய்ப்பு இல்லை என்றே தெரிகிறது.

மீண்டும் வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர்தான் இந்திய அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்படுவது உறுதியாகியுள்ளது.

பல்வேறு முன்னாள் வெளிநாட்டு வீரர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு வந்த நிலையில், அவுஸ்ரேலிய டெஸ்ட் அணியின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரரான ஜஸ்டின் லாங்கர் தேர்வு செய்யப்பட அதிக வாய்ப்பு உள்ளதாக கிரிகெட் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இங்கிலாந்து கிரிக்கெட் சபையும் ஜஸ்டின் லாங்கரையே பயிற்சியாளராக நியமிக்க விரும்புவதாக தெரிய வந்துள்ளது.

இதில் எந்த நாட்டை ஜஸ்டின் லாங்கர் தேர்வு செய்கிறார் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.






## வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.

சிறாரின் பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
பிறந்த ஆண்டு :- ..........................................

..........................
பெற்றோர் கையொப்பம்


# விதிமுறைகளை மீறிய ஹோலிக்கு எச்சரிக்கை விடுத்தது பி.சி.சி.ஐ.



ஐ.பி.எல்., போட்டியின் போது காதலி அனுஷ்கா சர்மாவுடன் பேசிய பெங்களூர் அணித்தலைவர் விராட் ஹோலிக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.), எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் டெல்லி, பெங்களூர் அணிகள் மோதிய ஐ.பி.எல்., லீக் போட்டி மழையால் கைவிடப்பட்டது. 'பெவிலியன்' திரும்பிய பெங்களூர் அணித்தலைவர் விராட் ஹோலி, வி.ஐ.பி. ஆசனத்தில் இருந்த தனது காதலி அனுஷ்கா சர்மாவை அழைத்து பேசினார்.

ஐ.பி.எல். ஊழல் தடுப்பு மற்றும் பாதுகாப்பு விதிமுறைப் படி போட்டி முடியும் வரை, போட்டிக்கு தொடர்பில்லாத நபர்களுடன் பேசுவது தவறு. இதனையடுத்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.,) சார்பில் விராட் ஹோலிக்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டது.

சமீபத்தில் ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியின் போது நடுவர் தர்மசேனாவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஹோலி, தற்போது மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

இதுகுறித்து ஐ.பி.எல்., தலைவர் ராஜிவ் சுக்லா கூறுகையில்,

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.,) ஊழல் தடுப்பு மற்றும் பாதுகாப்பு குழுவினர், ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்கும் வீரர்களின் நடவடிக்கையை கண்காணித்து வருகின்றனர்.

இவர்கள், ஹோலி, அனுஷ்கா சந்திப்பு குறித்து பி.சி.சி.ஐ. இற்கு நிச்சயம் புகார் தெரிவிப்பார்கள்.

அதற்கு முன், ஹோலியை அழைத்து இது போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் என எச்சரித்துள்ளோம் என்றார்.

# பாலியல் வன்புணர்வு தொடர்பில் விசாரணை நடாத்த வேண்டும்

## பான் கீ மூன் வலியுறுத்து

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நடந்தேறியவை எனக் கூறப்படும் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடாத்தும்படி ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன, ஐநா. பாதுகாப்புச் சபையிடம் வலியுறுத்தியுள்ளார.

அத்துடன், இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பது மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பன குறித்தும் பான் கீ மூன் தனது அறிக்கையில் வலியுறுத்தியிருக்கிறார்.

பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் பதிவான 19 நாடுகளை மையப்படுத்தி விடுத்துள்ள அறிக்கையிலேயே ஐ.நா செயலாளர் நாயகம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மோதலின் போது பரிசீலிக்கப்படாத சம்பவங்களான இந்த பாலியல வன்புணர்வுச் சம்பவங்கள இடம்பெற்றுள்ளதை அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடத்தல்கள், எதேச்சதிகாரமான கைதுகள், துன்புறுத்தல்கள், பாலியல் வன்புணர்வுகளும், அதற்கான வேறுவித செயற்பாடுகளும் யுத்தகாலத்தில் அதிகரித்திருந்ததாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் இடம்பெற்ற யுவதிகள் இருவர் மீதான பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களையும் அந்த அறிக்கையில் மேற்கோள்காட்டி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இறுதிக்கட்டப் போரிலும், அதற்கு முன்னரான பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீது பாலியல் வன்புணர்வுகளில் ஈடுபட்டதாக இலங்கை இராணுவம் மீது குற்றச்சாட்டு காணப்படுகிறது. அவை ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்ததாக தெரிவித்து தன் மீது பாலியல் வன்புணர்வுகள், இனரீதியிலான அவமானப்படுத்தல்கள் என்பவற்றை மேற்கொண்டிருந்ததாக தடுப்புக்காவலில் இருந்து கடந்த 2014 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட பெண் சாட்சியாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.



இந்த நிலையில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள இலங்கை அரசாங்கம், கடந்த காலங்களில் இராணுவத்தினர் மற்றும் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் பாலியல் வன்புணர்வுகள் தொடர்பில் விசாரணை நடாத்த வேண்டும் என்பதுடன், பெண்களைத் தலைமையாகக் கொண்டுள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி செயலக ஆவணங்கள் பழைய பத்திரிகை கடையில் மீட்பு

ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான ஒருதொகை ஆவணங்கள் கொழும்பிலுள்ள பழைய பத்திரிகை மற்றும் போத்தல் விற்பனை நிலையமொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

பொறளை நகரிலுள்ள பத்திரிகை விற்பனை மற்றும் காகிதாதிகள் களஞ்சிய நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் வாகனமொன்றில் வந்த நபர் ஒருவர் உரமூடை ஒன்றில் இவற்றை கொண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் மீட்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பான மேலதிக தகவல்களை பொலிஸார் இதுவரை வெளியிடவில்லை.

## இலங்கையரை கடத்திய நைஜீரிய தீவிரவாதிகள்

இலங்கையர் ஒருவர் நைஜீரியாவில் வைத்து ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நைஜீரியாவின் ஒன்டோ மாநிலத்தில் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவருடன் வாகனத்தில் பயணித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தீவிரவாதிகளின் துப்பாககிப் பிரயோகத்தில் காயமடைந்துளளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

பர்னி கோலி என்ற நிர்மாணத்துறை நிறுவனமொன்றில் பணி யாற்றிவரும் குறித்த் இலங்கையர் இன்னும் அடையாளம் காணப் படவில்லை.

# வெற்றிக் கொண்டாட்டங்களினால் புலிகளின் மனங்களே காயப்படும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



போர் வெற்றிக் கொண்டாட்டங்களினால் தமிழீழ விடுதலைப் புலிகளின் மனங்களே காயப்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வடக்கில் போர் வெற்றி கொள்ளப்பட்டு ஆறு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன.

இன்று அரசாங்க ஊடகங்கள் போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடத்தக்கூடாது என செய்தி வெளியிடுகின்றன.

இவ்வாறு கொண்டாடுவதனால் ஒரு தரப்பின் மனங்கள் காயப்படும் என குறிப்பிடுகின்றனர். யாருடைய மனங்களும் காயப்படாது, தமிழீழ விடுதலைப் புலிகளின் இதயங்களே போர்வெற்றிக் கொண்டாட்டங்களினால் காயப்படும்.

பெரும்பான்மை தமிழ் மக்கள போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதனை விரும்புகின்றார்கள்.

போருக்கு சென்று இன்று கல்லறைகளில் உறங்கிக் கொணடிருக்கும் எங்கள் பிள்ளைகள் எங்களை சபிக்கின்றார்கள்.

முதுகெலும்பு இல்லாத தரப்புக்கள் இந்த அரசாங்கத்தை நடாத்துகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இந்த அரசாங்கத்தை வழிநடாத்துகின்றது. ஒரேவிதமான எண்ணங்கள் உடையவர்கள் இன்று ஒன்று கூடியுள்ளனர்.

உரிய முறையில் சிந்திக்காவிட்டால் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது.

மைத்திரி யுகத்தின் நடவடிக்கைகளை மக்கள் கண்கூடாக பார்க்க முடிகின்றது.

அவ்வாறு தெரியாவிட்டால் அவர்கள் குருடர்களாகவே இருக்க வேண்டுமென விமல் வீரவன்ச தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

# ஐ.சி.ஆர்.சி.யுடனான உறவை வலுப்படுத்த விரும்பும் அரசு

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் முன்பிருந்ததைப் பார்க்கிலும், மேலும் வலுவான, நெருக்கமான தொடர்பை பேணவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் ஆசிய வலயத்திற்கான ஆறாவது ஆண்டு நிறைவு நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய வெளிவிவகாரப் பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் யுத்தத்தின்போதும், அதற்குப் பின்னரும் முன்னெடுத்துவந்த 25 ஆண்டுகால சேவையை பாராட்டிய பிரதியமைச்சர், முன்பிருந்ததைப் போலன்றி, அதற்கும் மேலாகவும், நெருக்கமாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# ரக்பி வீரர் தாஜுதீனின் மரணம் தற்செயல் அல்ல கொலை

ரக்பி வீரர் வாஸிம் தாஜுதீ னின் மரணம் கொலை என்பதை குற்றப்புலனாய்வு திணைக்களத் தினர் உறுதிப்படுத்தியுள்ளனர் இதன்படி விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டு அறிக்கை விரை வில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பொலிஸ் பேச் சாளர் ருவன் குணசேகர தெரி வித்துள்ளார். 2012 ஆம் ஆண்டு மே 17 ஆம் திகதியன்று கிரு லப்பனையில் வைத்து சுவர் ஒன் றில் தாஜுதீனின் கார் மோதிய நிலையில் அவர் உயிரிழந்தார்.



இது தொடர்பில் ஏற்கனவே வெளியான மருத்துவ அறிக்கை யிலும் இந்த மரணம் தற்செய லாக இடம்பெற்றது அல்ல என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இதில் சில மருத்துவ சாட்சியங்கள் குறைவாகவே இருந்தன. இந்தநிலையிலேயே தற்போது அனைத்து தரப்பு சாட் சியங்களின் அடிப்படையில் தாஜுதீனின் மரணம் கொலை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாஜுதீனின் கொலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோசித்த ராஜபக்ஷ தொடர்பு கொண்டிருந்தார் என்ற குற்றச் சாட்டின் மத்தியிலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

# வெலிக்கடை சிறைச்சாலை மோதல் தொடர்பில்

## கோத்தாவிடம் விசாரணை

கொழும்பு - வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் மோதல்கள் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோததாபய ராஜபக்ஷவிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறையில் கடந்த 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற மோதலில் 27 கைதிகள் உயிரிழந்திருந்ததுடன், 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இது குறித்து விசாரணை நடாத்துவதற்கென மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

குறித்த குழு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கோத்தாபய ராஜபக்ஷவிடம் 6 மணிநேர விசாரணை நடத்தியுள்ளதாக தெரியவருகிறது.

# உதைபந்தாட்ட போட்டி அட்டவணை

தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியாக அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி 2015 கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகள் நடைபெறும் அட்டவணை வருமாறு,

**28 ஆம் திகதி**

இளவாலை சென்.லூர்ட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மனோகர விளையாட்டுக் கழகம்.

அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் செஞ்சுடர் விளையாட்டுக் கழகம்.

**29 ஆம் திகதி**

வலிகாமம் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம.

**30 ஆம் திகதி நடைபெறும் போட்டிகள்**

கருணாகரன் விளையாட்டுக் கழக அணி எதிர் கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழகம்.

சுடர் ஒளி விளையாட்டுக் கழகம் எதிர் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம்.


**31 ஆம் திகதி நடைபெறும் போட்டிகள்**

பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் நியூட்டன் விளையாட்டுக் கழகம். இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் கழுகுகள் விளையாட்டுக் கழகம்.

(தொடரும்)



## பேரினவாதத்துக்குத் தூபமிடும் தமிழ் வாய்ச்சவடால்கள்



அண்மையில் ஒரு தமிழ் அரசியல்வாதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வருவதைத் தமிழ் முஸ்லிம் மக்கள் தடுப்பார்கள் என்று வாய்வீரம் பேசினார். அது தமிழ்ச் செய்தியேடுகளில் வந்தது அது சிங்களச் செய்தியேடுகளிலும் வந்திருக்கும். நிச்சயமாகத் தமிழ் சிங்களப் பகையை வேண்டும் ஏடனைத்திலும் வந்திருக்கும் இந்த விதமான வாய்ச்சவடால்கள் நிறையக் கைதட்டல்களையும் சிறிதளவு வாக்குகளையும் பெற்றுத் தரும் அதற்குமேல், அவை பொருளோ பெறுமதியோ அற்றவை.

உண்மையில் யூ.என்.பி.யின் தலைமையில் அமையுமென எதிர்பார்க்கப்படும் அடுத்த ஆட்சி மக்களின் பிரச்சினைகளைத் தீராது. பிரச்சினைகள் மேலும் மோசமாகி மக்கள் மீது சுமையேறும்போது ஆட்சி செல்வாக் கிழக்கும். அப்போது மக்களின் கவனத்தைத் திசை திருப்பப் பலவாறான உபாயங்கள் கையாளப்படும். அதையடுத்து வரும் தேர்தலில் ராஜபக்ஷ தலைமையிலான ஒரு கூட்டணியோ கட்சியோ ஆட்சியமைப்பதைத் தடுக்க நமது தமிழ்மறவர்கட்கு இயலுமா? அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ ஜனாதிபதி யாவதை அவர்கள் தடுப்பார்களா?


ராஜபக்ஷ வருவார் என்றோ வரவேண்டுமென்றோ நான் வேண்டவில்லை. ஆனால் அவரை நிராகரித்த பலர் ஐந்தாண்டுகளில் அவருடைய குற்றங்களையெல்லாம் மறந்திருப்பர். எனவே அவருடைய மீட்சியைத் தடுக்க அவர் கையாண்டதை விட மோசமான வழிமுறைகளைப் பாவிக்கும் தேவை ஏற்படலாம். ஆனாற் சிங்கள மக்களில் 50 சதவீதமானோர் ஆதரிக்கும் ஒரு கட்சியையோ 60 சதவீதமானோர் ஆதரிக்கும் ஒரு சனாதிபதி வேட்பாளரையோ 'தடுக்கும் ஆற்றல் சிறுபான்மைத் தேசிய இனத் தலைமைகட்கு இராது.

விவேகமற்ற வாய்ச்சவடால்கள் சாதிக்கப்போவது ஒன்று மட்டுமே சிங்களப் பேரினவாதத்துக்குத் தூபமிடுவதுடன் நிதானமான சிங்கள மக்களின் சுயமரியாதைக்குப் பங்கம் விளைவித்து அவர்களையும் ராஜபக்ஷவின் பக்கம் தள்ளுவதேயாகும்.

**- கோகர்ணன்**

# சொன்னார்கள்....

## மூடநம்பிக்கை அரசியல்



யுத்த வெற்றிக்குப் பின் இந்திய அமெரிக்க ஐரோப்பிய நலன்களுக்கும் கோரிக்கைகளுக்கும் முற்றுமுழுதாக இணங்கிச் சீன உறவைத் தூரத்தில் வைத்திருப்பாரேயானால் மகிந்த சகோதரர்களுக்கு தோல்வியும் வந்திருக்காது இன்றைய நிலைக்கு ஆளாகியிருக்கவும் மாட்டார்கள். அதே அந்நிய இரட்சகர்கள் மகிந்த சகோதரர்களுக்கு பாவ மன்னிப்பு வழங்கியிருப்பார்கள்.

ஆனால் யுத்த வெற்றி மமதையும் பதினெட்டாவது அரசியலமைப்புத் தீர்மானத்தின் தலைக்கனமும் சிங்கள மக்களை பேரினவாதத்தால் முட்டாள்கள் ஆக்க முடியும் என்ற ஆளும் வர்க்க சிந்தனையும் மகிந்தவையும் சகோதரர்களையும் சுற்றி நின்றவர்களையும் மண் கவ்வச் செய்து கொண்டன.

வரலாறு என்பது தனது முன்னோக்கிய பயணத்திற்குத் தேவையான போது சிலரையும் அத்தகையோரது ஆற்றல்களையும் உள்வாங்கி வரலாற்றுக் கடமைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் ஆனால் அதே நபர்கள் வரலாற்றிற்கு குறுக்கே நிற்க முற்பட்டால் அத்தகையோரை வரலாறு தூக்கி வீசிக் கொள்ளும். வரலாற்றின் இத்தகைய விதியினை நெப்போலியன் முதல் பிரபாகரன் வரையானவர்களின் தோற்றம், எழுச்சி, மக்கள்விரோதம், வீழ்ச்சி என்பனவற்றின் ஊடே காணமுடியும்.

இதனை விளங்கிக் கொள்ளுவதற்கு சமூக விஞ்ஞானம் தழுவிய வரலாற்று அரசியல் பார்வை அவசியமாகும். இத்தகைய பார்வையானது குறுகிய அரசியல் இலாபம் பெறும் சக்திகளது மூட நம்பிக்கை அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும்.

**- காலகண்டன்**

## சர்வதேச அழுத்தம் எனும் மாய மான்



விடுதலைப்புலிகள் வீழ்ச்சியடைந்து ஆறு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் தமிழ் அரசியல் சூழலில் என்ன நிகழ்ந்திருக்கிறது என்பதையும் ஒரு மீட்டலாகப் பார்க்க வேண்டும். அதில் ஒன்றுமில்லை என்று தமிழர் தரப்புக்கள் அடிக்கடி கூறிவந்த மாகாண சபையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பங்குகொண்டது. வடக்கு மாகாண சபையில் ஆட்சியை கைப்பற்றி, அதற்கென புறமைபல் உள்ளவர்களை அமைச்சர்களாக நியமித்து கிழக்கு மாகாண சபையிலும் அதிகாரத்தில் பங்குகொண்டது. இதே வேளை தமிழர் அரசியல் சர்வதேச மயப்பட்டு விட்டதாகவும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த ஆறு ஆண்டுகளில் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தை முன்வைத்து சர்வதேச அரங்கில் நிகழ்ந்த விடயங்கள் பலவும் தமிழரின் விவகாரமாகவே ஊதிப்பெருப்பிக்கப்பட்டன. ஆனால் அது உண்மைதானா என்பதை இப்போது தமிழர்கள் புரிந்துகொள்ள முடியும். ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள். இவற்றின் விளைவாக மகிந்த தலைமையிலான இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட எதிர் நடவடிக்கைகள். இதன் விளைவாக சீனாவை நோக்கி இலங்கை அதிகம் சாயத்தொடங்கியது. இதனால் இந்தியாவிற்கு ஏற்பட்ட கவலைகள், இவை அனைத்தும் இணைந்து இலங்கையை ஒரு மூலோபாய போட்டியாளர்களின் களமாக உருமாற்றியமை.... இப்படியாக தமிழர்களின் அரசியல் சர்வதேச மயப்படுவதாகக் கூறி, இறுதியில் சர்வதேச நிகழ்ச்சி நிரலில் தமிழ் மக்களின் விவகாரம் வெறும் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தப்பட்டு, இறுதியில் இன்று கவனிப்பாரற்ற ஒரு விடயமாகிவிட்டது.

**- யதீந்திரா**

## தீர்வை விட்டுவிட்டு பிரச்சினைகளை வளர்த்தபடி...




கூட்டமைப்பின் தலைமை மட்டத்தில் இனப்பிரச்சினைக்கு எத்தகைய தீர்வு என்பதில் உடன்பாடு இல்லை என்று பரவலாகப் பேசப்படுகின்றது. ஜனநாயக அரசியலில் அடியெடுத்து வைத்து ஐந்து வருடங்கள் கழிந்து விட்ட நிலையிலும், தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி உடன்பாட்டுக்கு வர முடியவில்லையென்றால் அந்தத் தலைமையின் காரியவலு பற்றிய கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியாது. தமிழ் மக்கள் ஐக்கியப்பட வேண்டும் என்று அடிக்கடி கோரிக்கை விடுக்கும் தலைவர்கள், இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதில் தங்களுக்குள் ஒற்றுமைப்பட முடியாதிருப்பதை எப்படி விளங்கிக் கொள்வது?

இனப்பிரச்சினையின் தீர்வு பற்றிப் பெரிய பெரிய எதிர்பார்ப்புகளை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருப்பதால் ஒரு பலனும் கிட்டப்போவதில்லை. பதவியிலுள்ள அரசாங்கத்தின் பங்களிப்புடனேயே அரசியல் தீர்வு சாத்தியமாக முடியும் என்பது தான் யதார்த்தம். இன்றைய நிலையில் நடைமுறைப்படுத்த முடியாத கோரிக்கைகளை முன்வைப்பதும் [illegible] நம்பிக்கைகளை மக்களிடம் வளர்ப்பதும் தீர்வைக் கொண்டுவரப்போவதில்லை. நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்துப் பொருத்தமான வழியில் அதை முன்னெடுப்பதே தீர்வுக்கான பாதை.

இந்த இடத்தில் சர்வசன வாக்கெடுப்பு பற்றியும் கூற வேண்டும். அரசியல் தீர்வுக்குச் சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் கிடைக்கக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிப்பதில் அரசாங்கம் அக்கறை செலுத்த வேண்டுமென மேலே கூறினோம். தமிழ்த் தலைமைக்கும் அந்தப் பொறுப்பு உண்டு. நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்துப் பகிரங்கப்படுத்துவது தென்னிலங்கை அரசியல்வழிச் சமூகத்தில் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் முயற்சிக்கு கைகொடுப்பதாக அமையும். தீர்வுத் திட்டத்தை தேர்தலில் முன்வைத்து மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற பின் அரசியலமைப்பு நிர்ணயச் சபைக்குக் கூட்டமைப்பின் ஆலோசனையாக அதைச் சமர்ப்பிக்கலாம்.

**- சிவா சுப்பிரமணியம்**

## எம்மைப் பார்த்துக் கேட்க வேண்டும்



முஸ்லிம்கள் எங்களுடன் இணைந்து அரசியல் ரீதியாகப் பயணிக்கத் தயாராக இருக்கிறார்களா அல்லது சிங்களவர்கள் எம்முடன் இணைந்து பயணிக்கத் தயாராக இருக்கிறார்களா என்ற கேள்விகள் ஒரு புறம் இருக்கட்டும். அவர்கள் எம்முடன் சேர்ந்து பயணிப்பதற்கு வழிசெய்யக்கூடிய ஒரு எதிர்காலம் பற்றியதாக எமது அரசியல் இருக்கின்றதா, அல்லது அவர்கள் எம்முடன் அரசியல் ரீதியாகச் சங்கமிக்கும் வகையில் நாம் எமது கடந்தகாலம் பற்றி சிந்தித்திருக்கின்றோமா என்ற கேள்விகளை நாம் எம்மைப் பார்த்துக் கேட்க வேண்டும்.

இந்த வகையிலே அரச வன்முறையினால் தமிழ் மக்கள் கூட்டாகச் சந்தித்த இழப்புக்களையும் ஆயுதப் போராட்டத்தின் தியாகங்களையும் நினைவுகூரும் அதேவேளை, தமிழ்மக்களின் பெயரினால் தமிழ்ச் சமூகத்தின் உள்ளும் ஏனைய சமூகங்களின் மீதும் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளினையும் அந்த வன்முறைகளினால் பாதிக்கப்பட்டோரினையும் தமிழ்மக்கள் விமர்சனத்துடன் நினைவுகூருவதும் இன்றைய காலத்தில் அவசியம்.

**- மகேந்திரன் திருவரங்கன்**

## மருத்துவ மரக்கறிகள்!



❖ வாத சம்பந்தப்பட்ட வியாதிகளை அவரைக்காய் கண்டிக்கும், நீரிழிவுக்காரர்கள் இதைச் சமைத்து உண்ண நீரிழிவு கட்டுப்படும். அவரைப் பிஞ்சு இரத்தக் கொதிப்பைக் குறைக்கும்.

❖ உருளைக் கிழங்கிலுள்ள யூரிக் அமிலம் சுண்ணாம்பு முதலியவற்றை கரைத்துவிடும் தன்மையுடையது "ஸ்கேர்வி" என்னும் சரும நோய் வராமல் தடுக்கும்.

❖ தொற்று நோய்கள் வராமல் தடுக்கும் ஆற்றல் கரட்டுக்கு உண்டு. கிருமிகளை அழிக்கும் வல்லமையும் இதற்கு இருக்கிறது.

❖ கோவைக்காயை பச்சையாக மென்று தின்றால் நாவில் உள்ள ரணங்கள் குணமாகும். கரப்பான் வியாதியும் இதனால் நீங்கும்.

❖ கத்தரிக்காயை அதிகமாக உண்டால் கரப்பான் வரும் என்பார்கள். இருப்பினும் அம்மை நோய் வராமல் தடுக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.

❖ கண்பார்வைக்கும், பல் உறுதிக்கும் சருமநோய் வராமல் இருப்பதற்கும், இரத்த சுத்திக்கும் ஏற்றது "தக்காளி".

❖ மார்புச் சளியையும், கபத்தையும் சுண்டைக்காய் போக்கும். வயிற்றிலுள்ள கிருமிகளை கொல்லும் ஆற்றல் இதற்கு உண்டு. சுண்டைக்காய் வற்றல் பித்தத்தைப் போக்கும். வாயு உபத்திரத்தைக் கண்டிக்கும்.

## செல்போன் கவனம்!



அளவுக்கு மிஞ்சினால் அமிர்தம் மட்டுமல்ல, செல்போனும் நஞ்சு என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். செல்போனில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சினால் மூளையில் புற்றுநோய்க் கட்டிகள் உருவாகுகின்றனவாம்.

அதிக பாதிப்பில்லாமல் செல்போனை எப்படிப் பயன்படுத்தலாம்?

- செல்போனை குறைந்த அளவே பயன்படுத்த வேண்டும். பேசுவதற்குப் பதில் எஸ்எம்எஸ் அனுப்பலாம். சாதாரண தொலைபேசியில் பேசலாம்.
- சட்டைப் பையிலோ, காற்சட்டைப் பையிலோ அதிக நேரம் செல் போனை வைக்கக் கூடாது. இதயம், விதைப் பை ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படும். முடிந்த அளவு செல்போனை உங்களுடன் ஒட்டாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.
- சிக்னல் குறைவாக இருக்கும் நேரத்தில் பேசினால் கதிர்வீச்சுப் பாதிப்பு அதிகமாக இருக்கும்.
- காதில் வைத்துப் பேசாமல், ஹெட் போனில் பேசாமல் செல் போன் ஸ்பீக்கரைப் பயன்படுத்திப் பேசுவது சிறந்தது, பக்கத்தில் உள்ளவர்கள் உங்களை அடிக்க வராமல் இருந்தால். பிறருக்கு போன் செய்யும்போது ரிங் போகும்போது போனைக் காதில் வைக்க வேண்டாம். அந்தச் சமயத்தில் சாதாரண நேரங்களைவிட பல மடங்கு கதிர்வீச்சு அதிகமாக இருக்கிறதாம்.

# தண்ணீர் குடியுங்கள்... நோயின்றி வாழுங்கள்...



நமது உடல், 60 சதவிகிதம் தண்ணீரால் ஆனது. நாம் விடும் மூச்சு... சாப்பிடும் சாப்பாடு ஜீரணமாகுதல். உடற்பயிற்சியின் போது ஏற்படும் வியர்வை என எல்லாவற்றிற்கும் உடலில் தண்ணீர் அவசியம். இவற்றிற்கு செலவழித்தவற்றை எப்படி எடுப்பது. ஆக தண்ணீர் குடிப்பது நமது கடமை.

இப்போதிலிருந்து ஆரம்பியுங்கள். எட்டு தம்ளர் தண்ணீரை நீங்கள் குடித்தாக வேண்டும். இது ஒவ்வொருவரின் கட்டாயத் தேவையாகும்.

நமக்கு தண்ணீர் சார்ந்த பிரச்சினைகள் வராமல் இருக்க வேண்டுமானால் இதனை நீங்கள் நிச்சயம் செய்ய வேண்டும்.

தண்ணீர் குடிக்காத உடம்பு டல்லடிக்கும். உடம்பு பலவீனமாய் இருப்பதைக் காட்டிக் கொடுக்கும்.

தேவைப்படும் தண்ணீரை சகஜமாய் நீங்கள் குடித்துக் கொண்டிருந்தால், நமது உடம்பின் அனைத்து உறுப்புகளையும் சுத்தமாக செயல்படவைக்கும். தண்ணீரின் வேலையே நமது உடலின் சிஸ்டத்தை சுத்தம் செய்து நன்றாக வைத்திருப்பதுதான்.

எடை குறைய தண்ணீர் குடிப்பது மிக அவசியம். உடலில் தண்ணீர் குறைந்தால் உடம்பு உதவி என கூக்குரலிடாமலே நம்மை உணரவைக்கும். இதனை சிலர் பசி என தவறாக புரிந்து கொண்டு, எதையாவது சாப்பிட்டு உடலில் கலோரியை ஏற்றிக் கொள்வர். இவை 100 கலோரிகள் வரை கூட செல்லலாம்.

ஆக... தாகம் என புரிந்து கொண்டு உடனே தண்ணீர் குடிக்க வேண்டும்.

உடலின் உள்ளே செல்லும் உணவை ஜீரணிக்க தண்ணீர் மிகவும் உதவுகிறது. ஜீரணம் சரியில்லையென்றால் அடிவயிற்றில் அசௌ கர்யம் ஏற்படும். உடம்பும் மனமும் டல்லடிக்கும்.

சாப்பிடுவதற்கு முன் இரு டம்ளர் தண்ணீர் குடித்தால் அதனால் ஒரு பெரிய நன்மை. குறைத்துச் சாப்பிடுவோம்.

இது குறித்து வேர்ஜினியா எடக் ஆய்வாளர்கள் ஆய்வு செய்து முடிவு அறிவித்தனர்:

இதன்படி சாப்பிடுவதற்கு முன், தண்ணீர் குடித்தால் ஒரு தடவையில் 85 கலோரி குறைவதாக கண்டுபிடித்துள்ளனர். இதே போன்று 12 வாரம் தொடர்ந்தால் நிச்சயம் மற்றவர்களைவிட 2.25 கிலோ எடை குறையுமாம்.

நமது உடலில் உள்ள கொழுப்புகளை எரிக்க தண்ணீர் நிச்சயம் தேவை. கலோரியே இல்லாத ஒரே பொருள் தண்ணீர்தான்.

சாதாரண தண்ணீரை குடிக்க போரடிக்கிறதா? வாசனை கலந்த தண்ணீரை குடியுங்கள் உதாரணமாக மினரல் வோட்டர்.

இதே தண்ணீரில் பழங்கள்... மூலிகைகள் இலைகள் என கலந்து சாப்பிடலாம்.

உதாரணமாக இஞ்சி சாறு கலந்த நீர், சீரகம் கலந்த நீர், எலுமிச்சை, தோடம்பழம், அப்பிள், வர்த்தகைப்பழம் உட்பட பல பழங்களை சாறெடுத்து, தண்ணீருடன் கலந்து சாப்பிடலாம்.

மரக்கறி சூப்... தக்காளி சூப்... மூலிகை சூப்... அறுகம்புல் சூப்... துளசி சூப் என உடலை, மேலும் வலுப்படுத்தும் எதனையும் சாப்பிடலாம்.

ஒரு நாளைக்கு, நிர்ணயிக்கப்பட்ட முதலில் குறிப்பிடப்பட்ட அளவு தண்ணீரை குடிக்க மறக்காதீர்கள்.

# "நாவல் பிறக்கிறது"



கும்பகோணம் கல்லூரியில் எனக்கு இணை பிரியாத நண்பன் ஒருவன் உண்டு. எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் தெய்வமாக வணங்குவான். அதை ஒரு தனி மதமாக வளர்த்திருந்தான் அவன். அவனோடு நெருங்கிப் பழக, என் உள்ளத்தில் சபலத்துக்கும் தூய்மைக்கும் மூண்ட ஓயாத சண்டைகள்....

நான் குடியிருந்த தெருவில் ஒரு கிழவர் ஐம்பத்தைந்து வயதில் ஒரு பதினாறு வயது கட்டழகியை (அழகான பெண்கள் யார் யாருக்கோ போய்ச் சேர்வதைப் பாருங்கள்) கல்யாணம் செய்துகொண்டு வந்து 32 வயதுப் பிள்ளையை அவன் மனைவி குழந்தைகளுடன் வீட்டை விட்டு விரட்டி, சரியாக ஒரு வருஷம் புது மனைவியோடு வாழ்ந்துவிட்டு திடீரென்று ஒருநாள் சிவபதம் அடைந்து விட்டார். அதை ஒரு வருஷம் பார்த்துக் கொண்டிருந்த ஆற்றாமை....

என்னைவிட எட்டு வயது அதிகமான ஒரு பெண். நன்றாகப் படித்தவள். நல்ல வடித்தெடுத்த அழகு. அடிக்கடி அவளோடு பேசிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. ஆழ்ந்த அமைதியும், புத்திக் கூர்மையும் எதையும் கண்டு வியந்து விடாத அழுத்தமும் நிறைந்த அவளை மரியாதையாகப் போற்றத் தொடங்கினேன். கடைசியில் அது மோகமாக மாறி அவள் அதைத் தெரிந்துகொண்டு என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போய், ஒரு வருஷம் கழித்து யாரோ ஒரு மின்சாரப் பொறியாளரைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட செய்தியைக் கேட்டது....

இந்த எல்லாமாகச் சேர்ந்து கொதித்து "மோக முள்" என்ற நாவலாக ஆகிவிட்டது. முக்கியமானவற்றைச் சொல்லியாகிவிட்டது. எப்படி அதை எழுதினேன் என்று கேட்டால் பதில் சொல்ல முடியவில்லை. அந்த எல்லா ஞாபகங்களும் உள்ளே கிடந்தன. ஒருநாள் ஒரு வாரப் பத்திரிகையிலிருந்து மூன்று பேர் வந்து "ஒரு தொடர்கதை எழுதுங்களேன்" என்றார்கள். நாலைந்து தடவை வந்தார்கள். இந்த ஞாபகங்கள், என் ஆசைகள், நப்பாசைகள், நான் எப்படி இருந்திருக்க வேண்டும் என்று நினைத்தேனோ, பார்த்த மனிதர்கள் பாத்திரங்களாக எப்படி மாற வேண்டும் என்று விரும்பினேனோ, எல்லாமாகச் சேர்ந்து நாவலாக உருவாயின.

மறுபடியும் எப்படி என்றால் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.

ஏதோ உட்காருகிறோம், எழுதுகிறோம். சிலசமயம் தரதரவென்று எழுத முடிகிறது. சில நாளைக்கு ஒரு வரிகூட எழுத முடியவில்லை. நாள் கணக்கில் எழுதவே முடிவதில்லை. எழுத வந்தால்தானே! நாலு நாள்கள், ஐந்து நாள்கள் மண்டையை உடைத்துக் கொண்டு கடைசியில் அழாத குறையாகப் படுத்து விடுகிறது. காலையில் எழுந்திருக்கும்போது பளிச்சென்று கோவில், சினிமாவுக்குப் போகிற பெண்கள் "குக்"கரில் வைத்துவிட்டுப் போகிற அரிசி மாதிரி, எல்லா சிரமங்களும் விடிந்து, தானாக எண்ணங்கள் பக்குவமாகி இருக்கும். வேகமாக, பேனா அதை எழுதி விடுகிறது. அவ்வளவுதான்.

**- தி. ஜானகிராமன்**

# நெல்சன் மண்டேலா நினைவாக!




கூகுள் ஸ்ட்ரீட்வியூ சேவையை நீங்கள் அறிந்திருக்கலாம். இல்லை என்றால் இப்போது அறிந்து கொள்வது பொருத்தமாக இருக்கும். ஏனெனில் கூகுள் இப்போது மண்டேலா சிறைவாசம் அனுபவித்த ரோபென் தீவுகளை ஸ்டிரீட்வியூவுக்குள் கொண்டு வந்துள்ளது. தென்னாபிரிக்காவில் இனவெறியை எதிர்த்து நீண்ட போராட்டம் நடத்தி வெற்றி பெற்ற மண்டேலா தன் இனத்துக்காக சிறையில் கழித்த 26 ஆண்டுகளில் 18 ஆண்டுகளை ரோபென் தீவுச் சிறையில் கழித்தார். ரோபென் தீவு இப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டு வரலாற்று அருங்காட்சியகமாக பாதுகாக்கப்படுவதோடு தென்னாபிரிக்காவில் அதிகம் விஜயம் செய்யப்படும் இடமாகவும் இருக்கிறது.

இப்போது தென்னாபிரிக்கா செல்லாமல், இந்த தீவுக்குள் சென்று பார்க்க சிறப்பு அனுமதி பெறாமல், இருந்த இடத்தில் இருந்தே மண்டேலா இருந்த சிறைச்சாலையை கூகுள் ஸ்டிரீட்வியூவில் சுற்றிப்பார்க்கலாம்.

இந்த இடத்தில் ஸ்ட்ரீட்வியூ சேவை பற்றி சிறு அறிமுகம். கூகுளின் வரைபட சேவையின் அங்கமான ஸ்டிரீட்வியூ உலக நகரங்களில் உள்ள தெருக் காட்சிகளை 360 பாகை கோணத்தில் படம் பிடித்துக் காட்டுகிறது. பிரத்தியேக கமெராவில் சுற்றியுள்ள காட்சிகள் அனைத்து கோணங்களிலும் படமாக்கப்பட்டு பின்னர் ஒன்றாக தைக்கப்பட்டு 360 பாகை கோணத்தில் காட்டப்படுகிறது. ஆகவே ஒரு இடத்தை அங்கிருந்து சுற்றிப்பார்க்கும் உணர்வைப் பெறலாம். சுவாரசியமான சேவை தான என்றாலும் தனியுரிமை மீறல் தொடர்பாக சர்ச்சைக்கு ஆளான சேவையும் கூட.

ஸ்டிரீட்வியூவின் சிறப்பசம் என்ன என்றால் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல இடங்களை நம் டெஸ்க்டொப்பில் இருந்தே பார்க்க வழி செய்வது தான். அமேசான் மழைக்காடுகள் முதல் தாஜ்மஹால் வரை ஸ்ட்ரீட்வியூவில் பார்க்கலாம்.

அந்த வகையில் மண்டேலா சிறைவாசம் அனுபவித்த ரோபென் தீவுச் சிறைச்சாலையை நேரில் சுற்றிப் பார்ப்பது போல வாயில் பகுதியில் இருந்து ஒவ்வொரு இடமாகப் பார்க்க கூகுள் வகைசெய்திருக்கிறது. மண்டேலாவுடன் சிறையில் இருந்த முன்னாள் அரசியல் கைதியான வுசுமி கொங்கோ(Vusumzi Mcongo) ஒரு வழிகாட்டி போல இந்தச் சிறையை சுற்றிக்காண்பிக்கிறார்.

மண்டேலாவின் நெருங்கிய நண்பரும் அவருடன் சிறைவாசம் அனுபவித்தவருமான அகமட் கத்ராடா இந்த முயற்சியை மனதார வரவேற்றுள்ளார். "20 ஆண்டுகளாக குழந்தைகளைப் பார்க்க முடியாமலும் பேச முடியாமலும், தான் ரோபென் தீவில் இருந்த காலம் மிகவும் கடினமானது" என்று கூறும் அகமட், இப்போது உலகம் முழுவதும் உள்ள பள்ளிக் குழந்தைகள் ஸ்ட்ரீட்வியூ மூலம் இந்தச் சிறையைச் சுற்றிப்பார்க்க முடிவது கவித்துவமான நீதி என்று நெகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

Google Cultural Institute இணையத்தளத்தில் இந்த உலா பதிவேற்றப்பட்டுள்ளது. இந்த தளத்தில் மண்டேலாவின் சிறைவாசம் தொடர்பான டிஜிட்டல் கண்காட்சிகளையும் காணலாம். வரலாற்றின் ஊடே உணர்ச்சிகரமான பயணத்துக்கு நீங்கள் தயாரா? விஜயம் செய்யுங்கள்:

www.google.com/culturalinstitute/exhibit/robben-island-prison-tour/mQIim-e6wopSJw

# தேவைகளை அடையாத அரசியலை மக்கள் ஆதரிப்பதால் பலனேதுமில்லை

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(பூநகரி)

தேவைகள் உள்ள சமூகமாக நாம் காணப்படும் நிலையில், தேவைகளை அடையும் விடயத்திற்கே நாம் ஆதரவளிக்க வேணடும்.

எமது மக்களுக்குரிய தேவைகளை அடையாத அரசி யலை மக்கள் ஆதரிப்பதால், மக்களின் தேவைகள் எந்த விதததிலும் நன்மையை ஏற்படுத்திக் கொடுக்காது என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரு மான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

கடந்த ஞாயிற்றுக்கிழமை பூநகரி கரியாலை நாகபடுவான கிழக்கு பிரதேசத்தில் மக்கள் அமைப்பு பிரதிநிதிகளையும், மக்களையும் சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மீள்குடியேற்றத்தின் போது மக்களிடம் தேவைகள் அதிகளவில் காணப்பட்டன. ஆனால், தற்போது அந்த தேவைகள் கணிசமானளவு குறைந்துள்ளன. ஆனால் இன்றும் மக்களுக்கு தேவைகள் உள்ளன.

எனினும், மீள்குடியேற்ற காலப்பகுதியுடன ஒப்பிடும்போது அந்த தேவை கள் தற்போது குறைவடைந்து மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழக்கூடிய சூழல் உருவாக் கப்பட்டிருக்கிறது.

கடந்த முப்பது வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தின் போது மக்கள் தமது எதிர்காலம் தொடர்பாக சிந்திக்கவில்லை. இதனால் மக்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படவில்லை. எனவே, தற்போது யுத்தம் நிறைவடைந்து நாட்டில் ஒரு இயல்புச் சூழல் ஏற்பட்டுள்ள இந்தக் காலப்பகுதியில் மக்கள் தமது பிள்ளைகளினதும், தங்களதும் எதிர்காலம் தொடர்பாக சிந்திக்க ஆரம்பித்துள்ளார்கள் தற்போது மாவட்டத்தில் முக்கிய தேவையாக மக்கள் நிரந்தர வருமானத்தை பெறும் வழகையில் தொழிற்றுறைகளை ஆரம்பிக்க வேண்டும் இதனை கருத்தில் எடுத்தே இந்த மாவட்டத்தில் மின்சாரம், வீதி போக்குவரத்து உள்ளிட்ட உட்கட்டுமான அபிவிருத்திகளை கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொண்டோம் இதனால், பல நிறுவனங்கள் தமது தொழிற்சாலைகளை எமது மாவட்டத்திற்கு கொண்டு வருவதற்கான அடிப்படை வசதிகளை நாம் ஏற்படுத்திக் கொடுத் திருந்தோம். நாடு இயல்புச் சூழலில் உள்ளபோதே இவை யனைத்தும் சாத்தியமாகும்.

எனவே, அவ்வாறான சூழ்நிலை தற்போது காணப்படுகிறது. இதனைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

நகரத்தில் மட்டும் தொழிற்சாலைகள் இல்லாமல் கிராமங்களை நோக்கியும் நகர்ததப்பட்டாலே அனைவருக்கும் வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இதன் மூலம் மக்களின் வாழ் வாதாரம் மேம்படுத்தப்படும். எனத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன். பூநகரி பிரதேச சபை உறுப்பினர் நோயல், கரியாலை நாகபடுவான் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் பரந்தாமன்,செயலாளர் ரவி, பொருலாளர் இராசா, பல்லவன் விளையாட்டுக்கழகத் தலைவர் ஞானம் ரதிகரன் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புதிய மின்கம்பம் இணைத்தும் பயனேதும் கிட்டவில்லை

(புலோலி நிருபர்)

புலோலி - கிராமக்கோடு - மருதங்கேணி வீதியில் வெடித்து உருக குலைந்திருக்கும் மின் கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின்கம் பங்கள் நாட்டப்பட்டு சுமார் ஒரு வருடகாலமாகியும் இற்றை வரை புதிய மின் கம்பங்களுக்கு மின் இணைப்பு பொருத்தப்பட வில்லை. புதிய மின் கம்பங்கள், உருக்குலைந்திருக்கும் மின் கம்பங்களுக்குத் துணை நிற்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதியில் சுமார் பத்துக்கு மேற்பட்ட மின் கம்பங்கள் வெடித்து உருக்குலைந்து முறியும் நிலையில் காணப்பட்டன. இவற்றுக்குப் பதிலாகவே இலங்கை மின்சார சபையால் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னராக புதிய மின் கம்பங்கள் நாட்டப் பட்டிருந்தன. ஆனால் இற்றை வரை புதிய மின் கம்பங்களுக்கு மின் இணைப்பு பொருத்தப்படவில்லை. கடும் காற்று வீசும் காலங்களில் சேதமடைந்திருக்கும் மின் கம்பங்கள், வீடுகளின் மேலும், வீதியிலும் முறிந்து வீழ்ந்து உயிராபத்தினை ஏற்படுத்தும் நிலையில் இருப்பதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (166)

# முல்லையிலும் கண்டனப் பேரணி




(முல்லைத்தீவு)

யாழ்ப்பாண புங்குடுதீவில் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவியின் படுகொலையினைக் கண்டித்து முல்லைத்தீவில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மாணவர்களின் கண்டனப்பேரணி நடைபெற்றது.

முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவர்களால் நடாத்தப்பட்ட இக்கண்டனப்பேரணி முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் தொடங்கி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினைச் சென்றடைந்து மாவட்ட செயலர் திருமதி.றூபவதி கேதீஸ்வரனிடம் மனுக் கையளிக்கப்பட்டுள்ளது. (160)

# வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வரி மதிப்பீடு செய்யக்கோரிக்கை

(வவுனியா)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வரி மதிப்பீடு செய்யப்படவேண்டும் என வரியிறுப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வரி மதிப்பீடுகளில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளதாக வரியிறுப்பாளர் சங்கம் தெரிவித்துள்ள நிலையிலேயே புதிய வரி மதிப்பீடு செய்யப்படவேண்டும் என வரியிறுப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை 2009 ஆம் ஆண்டு செய்யப்பட்ட வரி மதிப்பீடுகளின் பிரகாரம் வவுனியா நகரப்பகுதியில் வரி மதிப்பீடுகள செய்யப்படவில்லை எனவும் தற்போதைய வரி அறவீட்டில் முரண்பாடுகள் உள்ளதாகவும் குற்றச்சாட்டுக்களை வடமாகாண சுகாதார அமைச்சர் உட்பட வட மாகாணசபை உறுப்பினர்களிடம் வரியிறுப்பாளர்கள் சங்கம் முன்வைத்துள்ள நிலையில் இக் கோரிக்கை எழுந்துள்ளது.

# சிமெந்து பொதிகளுடன் மயிலிட்டியில் “கிங்டன்” கப்பல்

இந்தியாவிலிருந்து 775 மெற்றிக் தொன் சிமெந்து பொதிகளை ஏற்றிய “கிங்டன்” கப்பல் கடந்த திங்கட்கிழமை காலை மயிலிட்டித் துறைமுகத்தை வந்தடைந்தது. வட பகுதியில் தற்போது சீரற்ற காலநிலை நிலவிய போதிலும், இலங்கை துறைமுக அதிகார சபை உத்தியோகத்தர்களும், மற்றும் பொதி சுமக்கும் தொழிலாளர்களது துரித முயற்சியினாலும் கப்பலிலிருந்து சிமெந்து பொதிகள் இறக்கும் பணி வியாழக்கிழமை மாலை முடிவடைந்தன. மேற்படி சிமெந்து, யாழ்.மாவட்டத்திலுள்ள தனியார் வர்த்தகர்களுக்கே எடுத்துவரப்பட்டுள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் காங்கேசன்துறை பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (166)

# அறிவாலய கட்டடம் அமைக்க கொக்குவிலில் அடிக்கல் நாட்டல்

(திருநெல்வேலி)

கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா நிதி என்னும் அரசின் செயற்றிட்டத்தின் கீழ் கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கான அடிக்கல்லை மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் திருமதி விஜய கலா மகேஸ்வரன் அண்மையில் நாட்டி வைத்தார்.

அறிவாலயத்தின் ஆலோசகரும், சங்கானைப் பிரதேச செயலருமான அ.சோதிநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், நல்லூர் ஐ.தே.க. அமைப்பாளர் எஸ்.குலேந்திரராஜா, உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரநாதன் உட்படப் பல பிரமுகர்கள், மாணவர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

அறிவாலயக் கட்டட வேலைகளுக்காக மேலும் ஒரு மில்லியன் ரூபா நிதியைத் தான் ஒதுக்குவதோடு தனது தனிப்பட்ட நிதிப்பங்களிப்பையும் செய்வதாகப் பிரதியமைச்சர் தனது உரையின் போது குறிப்பிட்டார்.

இக் கட்டடத் தொகுதியின் மேற்தளத்தில் அமையவுள்ள கலாசார மண்டபத்தை முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் ஞாபகார்த்த மண்டபமாக அமைத்துத் தரும்படி கோரி அறிவாலய செயலாளர் எஸ்.என்.பிறேம்குமார் மகஜர் ஒன்றைப் பிரதியமைச்சரிடம் கையளித்தார்.(137)

## முரசின் இன்றைய பலன்

(20.05.2015 புதன்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 06 ஆம் திகதி.
துதியை - திதி. சித்தம் யோகம்.
மிருகசீரிட நட்சத்திரம் மு.இ. 10.44 வரை. பின் திருவாதிரை.
இராகு காலம் 11.52 - 01.22 வரை. சுபநேரம் 04.22 - 05.52 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** – உதாசீனப்படுத்திய உறவினர் தேடி வருவார்கள்.

**ரிஷபம்** – பொறுப்பின்றிக் கொடுத்த பணம் தெய்வ செயலால் வந்தடைதல்.

**மிதுனம்** – பிள்ளைகளின் அழைப்பினால் வெளியூர் யோகம்கிட்டுதல்.

**கடகம்** – புதிய மனை அமைக்க ஏற்ற இடத்தை தெரிவு செய்தல்.

**சிம்மம்** – சுபகாரிய நிறைவேற்றத்திற்காக கடன்பட முயலுதல்.

**கன்னி** – வியாழசுகம் இருப்பதினால் புதிய முயற்சியில் கால் பதித்தல்.

**துலாம்** – வீண் அவதூறு பேசுபவரைக் கண்டு ஒதுங்கி விடுதலினால் பிரச்சினை எழாது.

**விருச்சிகம்** – குடும்பத்தவருடன் வீண் வாக்கு வாதங்களில் ஈடுபடாது இருங்கள்.


**தனுசு** – கேட்ட உதவி கிட்டியதனால் ஆனந்தமடைதல்.

**மகரம்** – பிறரிடம் உங்கள் செயற்றிட்டங்களைக் கூறாது தவிர்த்து விடுங்கள்.

**கும்பம்** – எதிர்ப்புக்களும் தொழில் சம்பந்தமான போட்டிகளும் நீங்கும்.

**மீனம்** – மனக்குறைகள் நீங்குவதுடன் முன்னேற்றப்பாதை திறக்கும்.

# வேலணை மத்திய கல்லூரியில் தொழிற்பயிற்சிக்கூடம்



அரசாங்கத்தின் நேரடி நிதித் திட்டத்தின் கீழ்குறிப்பிட்ட பாடசாலைகள் தோறும் தொழிற் பயிற்சிக் கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, யாழ். தீவகத்தில் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வரும் வேலணை மத்திய கல்லூரி வளாகத்திலும், பல அடுக்குமாடிகளைக் கொண்ட தொழிற்பயிற்சிக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வருடத்திற்குள் இதன் கட்டடப்பணிகள் நிறைவு பெற்று அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து மாணவர்களுக்கான,தொழிற பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்பயிற்சிக் கூடத்தில் கல்விசார் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில்,தீவகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும்,பெருமளவு மாணவர்கள் தொழிற்பயிற்சி பெற முன்வருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவேளை வேலணை மத்திய கல்லூரியில்,நீண்ட காலமாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருவதாகவும் மாணவர்களின் தொகைக்கேற்ற ஆசிரியர்கள் இல்லாமையால் மாணவர்கள் கல்வி கற்க சிரமப்படுவதாகவும் ஆசிரியர்களின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு இதுவரை எந்த விதமான நடைவடிக்கையையும் சம்பந்தப்பட்டவரகள் எடுக்க முன்வரவில்லை என்றும் பெற்றோர்கள் கவலையுடன் சுட்டிக் காட்டுகின்றனர்.

# வறுமைக்குட்பட்ட மக்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுன்னாகம் இளைஞர் கழகத்தின் 'இளைஞர் இதயமும் சமுதாய உதயமும்' எனும் செயற்றிட்டத்தின் கீழ் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்குட்பட்ட மாணவர்களுக்கு ஒரு தொகை கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி கழகத்தின் தலைவர் 'ரவிச்சந்திரன் காமராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலையின் அதிபர் திருமதி ஆர்.தவரஞ்சனி, ஆசிரியர்கள் மற்றும் கழக உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் பழைய மாணவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே குறித்த உதவி வழங்கப்பட்டுள்ளதாக கழகத்தின் தலைவர் தெரிவித்தார்.


எதிர்காலத்தில் இளைஞர் இதயமும் சமுதாய உதயமும் செயற்றிட்டத்தின் கீழ் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வைகாசிப் பொங்கலும் வளந்துப்பானை உற்சவமும்

மல்லாகம் நீலியம்பனை அருள்மிகு பெரியநாயகி தாயார் சமேத பெரிய தம்பிரான் திருக்கோயிலின் வருடாந்த வைகாசிப்பெரும் பொங்கல், வளந்துப்பானை உற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மல்லாகம் சாடியடியில் சனிக்கிழமை காலை வளந்துப்பானை விசேட பூஜை, நோன்பு வழிபாடுகள் இடம்பெற்று அதனைச் தொடர்ந்து மகேஸ்வர பூஜை நடைபெறும். அன்று பி.ப. 4 மணிக்கு விசேட பூஜை ஆரம்பித்து வளந்துப்பானைகளுடன் 7ஆம் கட்டை ஊடாக காங்கேசன்துறை வீதி மல்லாகம் சந்தியூடாகச் சென்று நீதிமன்ற வீதியால் பெரியதம்பிரான் ஆலயத்தைச் சென்றடையும் மறுதினமான ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆலயத்தில் காலை 9 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகள் ஆரம்பித்து பொங்கல், விசேட பூஜைகள் நடைபெற்று மதியம் 12 மணிக்கு தீ மிதிப்பும் நடைபெறும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் நடைபெறும் என ஆலய பூசகர் தெரிவித்துள்ளார்.

# உடுபுடவைகள் வழங்கும் நிகழ்வு



(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் 19 கிராமசேவகர் பிரிவுக்குள் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 500 குடும்பங்களுக்கு உடுபுடவைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 19 கிராம சேவகர் பிரிவில் விசேட தேவையுள்ளோர் மற்றும் வறுமைகோட்டின் கீழ்வாழ்வோர் போன்ற சுமார் 500 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் விசேட உதவித திட்டத்தின் கீழ் உடுபுடவைகள் வழங்கப்பட்டன இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர், விவசாய அமைச்சர், மாகாண சபையின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு மக்களுக்கு இவற்றை வழங்கி வைத்தனர்.

(160)

# ஆயுர் வேதம்

## உடல் வலிமை பெற மூங்கில் அரிசி!



மூங்கில் பூப்பதும், அதில் அரிசி விளைவதும் ஓர் அரிய நிகழ்வு. மூங்கில் நெல் என்று ஒன்று இருக்கிறது. நீரிழிவு நோயால் கட்டான உடலை இழந்து சக்கையாகிப் போனவர்களை மறுபடியும் சீரான உடலமைப்பைப் பெறச் செய்யும் உன்னதமே மூங்கிலரிசியாகும்.

மூங்கிலரிசியை வெண்பொங்கல் போலவும் அல்லது பாயாசம் போலவும் செய்து சாப்பிடலாம். மூங்கிலரிசி, தினையரிசி, சாமையரிசி ஆகியவற்றை வகைக்கு 100 கிராம் எடுத்துச் சேர்த்து அரைத்து தூள் செய்து கொள்ளவும். இதில் இரண்டு தேக்கரண்டி எடுத்து கஞ்சிபோல் செய்து சாப்பிட்டு வர தேகமெல்லாம் வலுவடையும். வஜ்ரம்போல் இறுகும். நீரிழிவு நோய் கட்டுப்படும். மூட்டுவலியை குணமாக்கும்.

**மூங்கில் அரிசிக் கஞ்சியின் விவரம்** – மூங்கில் அரிசி, குறுணல் அரிசி – வகைக்கு 150 கிராம், சீரகம், ஓமம் – வகைக்கு அரைத் தேக்கரண்டி, பல்பூண்டு – 6, சுக்கு – ஒரு துண்டம், நல்லெண்ணெய் – ஒரு தேக்கரண்டி, உப்பு – தேவைக்கு.

மூங்கில் அரிசி, குறுணல் அரிசி, சுக்கு ஆகியவற்றைத் தனித்தனியே ஒன்றிரண்டாகப் பொடித்து எடுக்கவும். பொடித்த சுக்குடன் சீரகம், ஓமம் சேர்த்து வெறும் வாணலியில் சிவக்க வறுக்கவும். அதில், நல்லெண்ணெய் ஊற்றி, பொடியாக அரிந்த பூண்டைப் போட்டு வதக்கவும். நன்கு வதங்கியதும் தேவையான அளவு தண்ணீர் ஊற்றிக் கொதிக்கவிடவும்.

முதல் கொதி வந்ததும் மூங்கில் அரிசியை அதில் கொட்டவும். அடுத்த கொதி வந்ததும் குறுணல் அரிசியையும் அதில் போட்டுக் கொதிக்கவிடவும். நன்றாகக் கொதித்து கஞ்சி பதம் வந்ததும், தேவையான அளவுக்கு உப்பு சேர்த்து இறக்கவும்.

இதை உண்பதால் மூட்டு வலி, மூட்டில் நீர் கோர்த்துக் கொள்ளுதல், முதுகெலும்பு வலி, இடுப்பு வலி, கழுத்து வலி, உடல் பலவீனம் போன்ற பிரச்சினைகளுக்கு நிவாரணம் அளிக்கும். உடலில் உள்ள சுண்ணாம்புச் சத்துக் குறைபாட்டைப் போக்கும்.

மூங்கில் அரிசி நார்ச்சத்து மிக்கது. உடல் வலிமை பெறும். வெல்ல அளவைக் குறைக்கும். எலும்பை உறுதியாக்கும். நரம்புத் தளர்ச்சியை சீர் செய்யும்.

**தினை** – உடலிற்கு வலுவைத் தரும். சிறுநீரை அதிகம் வெளியேற்றி தசைகளை இறுகச் செய்யும். கொழுப்பு – ஊளைச்சதை சேரவிடாது. நல்ல பசியை உண்டாக்கும். விந்தணுக்களை வளரச்செய்யும். வீக்கம், நாட்பட்ட காய்ச்சல், கபம், வாதநோய் இவற்றிற்கு ஏற்ற உணவு. இதனை சோறாக்கிச் சாப்பிடலாம். கஞ்சியாக்கிச் சாப்பிட வீக்கம், நீர்த்தேக்கம் வடியும். கூழை பிரசவித்த மாதர் சாப்பிடுவது வழக்கம். இதனை லேசாக வறுத்து மாவாக்கி தேனுடன் சாப்பிட களைப்பு நீங்கும்.

**சாமை** – எளிய உணவுப்பொருள். இனிப்பும், குளிர்ச்சியும் தரும். எளிதில் செரிக்கும். வயிற்றுப் புண்ணை ஆற்றும். உள்ளெரிச்சல் காய்ச்சல் நிற்கும். உடல்வளர்ச்சிக்கும், தாதுவிருத்திக்கும், புஷ்டிக்கும் ஏற்றது. இதன் கஞ்சி பேதியை நிறுத்தும்.

**குதிரைவாலி** – குதிரைவாலியில் நார்ச்சத்து மிகுதியாக காணப்படுவதால் உடலில் மலச்சிக்கலை தடுப்பதிலும், கொழுப்பு அளவை குறைப்பதிலும் சமிபாட்டின் போது இரத்தத்தில் இருந்து குளுக்கோஸ் அளவை மெதுவாக வெளியிடுவதற்கும் உதவுகிறது. இதய நோயாளிகள் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கு நல்ல உணவாகப் பயன்படுகிறது.

குதிரைவாலி அரிசியை சோறாக்கி சாப்பிடலாம். இதனால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து அடிக்கடி சளி, காய்ச்சல் ஏற்படாமல் தடுக்கும். நூறு கிராம் குதிரைவாலியில் புரதச் சத்து 6.2 கிராம், கொழுப்புச் சத்து 2.2 கிராம், தாது உப்புகள் 4.4 கிராம், நார்ச்சத்து 9.8 கிராம், மாச் சத்து 65.5 கிராம், கல்சியம் 11 மில்லிகிராம், பொஸ்பரஸ் 280 மில்லிகிராம் என அடங்கியிருப்பதாக நவீன ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**இதனுடைய மருத்துவ பயன்கள்** – உடலைச் சீராக வைக்க உதவுகிறது, வெல்ல அளவினை குறைக்க வல்லது, இரும்புச்சத்து இரத்த சோகை வராமல் தடுக்கவும், அதிலுள்ள நார்ச்சத்து மலச்சிக்கலை தடுக்கவும் சமிபாட்டிற்கும் உதவுகிறது.

# சர்வதேச கருணபௌத்த மாநாடு இன்று வீரசிங்கம் மண்டபத்தில்

சர்வதேச கருண பௌத்த மாநாடு இன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

முதன் முதலாக இலங்கையில் நடைபெறும் இந்த மாநாடு யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியாவிலிருந்து பௌத்தமதம் சார்ந்த 60 பேர் வருகை தந்துள்ளார்கள்.

இந்து விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், புத்தசாசன அமைச்சர் கரு ஜெயசூரிய ஆகியோரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், மதகுருமார்கள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# போருக்குப் பிந்திய காலப்பகுதியில் நல்லிணக்க செயற்பாடு பூச்சியம்

## - ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு -

(கொழும்பு)

பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கு ஒரு போதும் இடமளியேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

போருக்குப் பின்னரான காலத்தில் நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் பௌதீக வளங்களை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மாத்தறையில் நடைபெற்ற 6 ஆவது வெற்றிவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவருவதற்காக முன்னின்று உழைத்த அரச தலைவர்கள் சகலரையும் தான் மதிப்பதாகவும் அதற்காக உயிர் தியாகம் செய்த முப்படையினரையும் நினைவுகூர்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டும் ஒன்றோடு ஒன்றாக இணைந்து முன்னெடுக்கப்படல் வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்புக்காக முன்னெடுக்கவேண்டிய சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கு இடமளிக்க மாட்டேன் என்று தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்புப் படைகளின் மனித வளங்கள் மேம்படுத்தப்படும் என்பதுடன் பௌதீக வளங்களும் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் கூறினார்.

இதேவேளை, நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டிய சகலவற்றையும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டின் மற்றுமொரு அத்தியாயத்துக்கான பக்கம் ஆரம்பிக்கப்படுகின்றது என்றும். அவர் தெரிவித்தார்.

# ஜெகத் டயஸின் புதிய நியமனம் கருத்து வெளியிடதயங்கும் ஐ.நா.



(கொழும்பு)

இராணுவத் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் நியமிக்கப்பட்டுள்ளது குறித்து, ஐ.நா. மனித உரிமைகள பேரவையின் கருத்துக்காக காத்திருப்பதாக, ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில், இன்னர் சிற்றி பிரஸ் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையில், பெயரிடப்பட்டிருந்த, 57ஆவது டிவிசனைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதானது, போர்க்குற்றங்களை ஊக்குவிப்பதாக கருதப்படுவதாகவும், இதுகுறித்த ஐ.நா. பொதுச்செயலரின் கருத்து என்ன என்றும், இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியது.

அதற்குப் பதிலளித்த ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளர், இந்த விவகாரத்தில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை முதலில் கருத்து வெளியிட அனுமதிக்க வேண்டும் என்று தாம் நினைப்பதாகவும், பொறுத்திருந்து பார்க்குமாறும் குறிப்பிட்டுள்ளார்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நீதிமன்றுக்கு அறிக்கை

## - பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு -

(முள்ளிவாய்க்கால்)

முள்ளிவாய்க்காலில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில், நடாத்தப்பட்ட நினைவுநாள் நிகழ்வு தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு பொலிஸ் அறிக்கை சமர்ப்பிக்கும் என்று, பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்டப் போரில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளை நினைவு கூர்ந்து நேற்று முன்தினம் காலை முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வு நடாத்தப்பட்டிருந்தது.

முன்னதாக, முல்லைத்தீவு பொலிஸ் பிரதேசத்துக்குள், விடுதலைப் புலிகளை நினைவு கூரும் எந்த நிகழ்வுகளையும், நடத்தக் கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம், கடந்த சனிக்கிழமை உத்தரவிட்டிருந்தது.

# சிங்கள வித்தியாலயம் யாழில் ஆரம்பம்

இனப் பிரச்சினையினால் யாழ்ப்பாணத்தில் மூடப்பட்டிருந்த யாழ். சிங்கள மகா வித்தியாலயத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் எஸ்.இராதாகிருஷ்ணனிடம் பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மேற்குலகின் பொம்மையாக மீளவும் மாறியுள்ள இலங்கை

## - கெஹலிய குற்றச்சாட்டு -

(கொழும்பு)

மேற்கத்தைய நாடுகளுக்கு பொம்மையாக செயற்பட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்தார். எனினும் தற்போதைய ஜனாதிபதி மேற்குலக நாடுகளுடன் நட்புணர்வை பேணுகிறார் என கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஆங்கில செய்தித்தாள் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்க காலத்தின் போது இலங்கையை பொம்மையாக செயற்படுவதுவதற்கே மேற்கத்தைய நாடுகள் முயற்சித்தன. எனினும் அதனை ஏற்காது செயற்பட்டமை காரணமாகவே விடுதலைப்புலிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் படையினரும் இணைந்து தோற்கடித்தனர்.

எனினும் இன்று கடந்த சில மாதங்களுக்குள் நிலைமையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

வடக்கில் இறந்துபோன உறவுகளுக்காக நினைவேந்தல் நிகழ்வுகள் நடாத்தப்படலாம்.

ஆனால் சில அமைப்புக்கள் விடுதலைப்புலிகளை நினைவு கூரும் வகையில் நிகழ்வுகளை நடாத்துவதாகவும் கெஹலிய ரம்புக்வெல குற்றம்சாட்டியுள்ளார்.

# பொதுத்தேர்தல் யூலையில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

எதிர்வரும் ஜூலை மாதம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

19ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தின் அதிகாரம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பில் மேலும் மாற்றங்கள் செய்வதானால், கருத்து வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும்.

உயர்ந்த மட்டத்தில் அபிவிருத்தி அடைந்த ஜனநாயகம் மற்றும் அரசியல் உறுதிப்பாடு நிலவுகின்ற போது தான் அனைத்துலக சமூகம், ஒரு நாட்டைக் கருத்தில் கொள்ளும். அதன் பின்னரே, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தொழில் தொடங்க முயற்சிப்பார்கள்.

எனவே, ஜனநாயக ஆட்சி இன்னும் வலுப்படுத்தப்பட வேண்டும். ஊழல் அகற்றப்பட வேண்டும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## - ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் -

# பொலிஸ் அதிகாரி விளக்க மறியலில்

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றும் உதவி பொலிஸ் அதிகாரி மற்றும் பொலிஸ் சார்ஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் யூன் 1ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். நேற்று அங்குனுகொல பெலஸ்ஸ நீதவான் நயந்த சமரதுங்க முன்னிலையில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அங்குனுகொலபெலஸ்ஸ பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட கூட்டத்தில் இராணுவ கோப்ரல் ஒருவர் துப்பாக்கியுடன் சென்றிருந்தார்.

அவரை சோதனை செய்தே பொலிஸார் உள்ளே செல்ல அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில் கடமையில் இருந்த உதவி பொலிஸ் அதிகாரியும் சார்ஜன்ட் ஒருவரும் குற்றப புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இராணுவ கோப்ரல் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அவருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி சம்பூரில் உண்ணாவிரத போராட்டம்



(சம்பூர்)

சம்பூரில் தமது சொந்தக் காணிகளில் தம்மை குடியேற்ற வலியுறுத்தி அப்பகுதி மக்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று சம்பூர் பத்திரகாளியம்மன் ஆலய முன்றிலில் கூடிய மக்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கேட்வே நிறுவனம் தனது வழக்கை விலக்கிக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். அத்துடன், கிளிவெட்டி நலன்புரி நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட சாகும்வரை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் ஈடுபட்டுள்ள சம்பூர் மக்களை ஆதரிக்கும் வகையிலும் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

56. காணாமற்போன தேசிய அடையாள அட்டைபற்றி அறிக்கையைப் பதிவு செய்யச் செல்ல வேண்டிய இடம்?
1) பிரதேச செயலாளர் காரியாலயம் 2) கிராமசேவகர் அலுவலகம்
3) பொலிஸ்நிலையம் 4) மாவட்டத்தேர்தல் ஆணையாளர் அலுவலகம்

57. குட்டியீனுவதன் மூலம் தம் இனத்தை பெருக்கும் பிராணி?
1) அணில் 2) தவளை 3) பல்லி 4) ஓணான்

58. மணியாசு பயன்படுத்தப்படும் கைத்தொழில்
1) தச்சுதொழில் 2) மேசன்தொழில் 3) விவசாயத்தொழில் 4) மீன்பிடித்தொழில்

59. சிவப்பு நிற வளையத்தில் காட்டப்படும் உரு உணர்த்துவது?
1) பாரஊர்திகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது
2) பேருந்து செல்லத்தடை
3) பாரஊர்திகள் வேகமாக செல்ல தடை
4) பாரஊர்திகளுக்கு வீதி ஒதுக்கப்பட்டுள்ளது



60. இலங்கை முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட ஆண்டு
1) 1505 2) 1620 3) 1796 4) 1813

61. பின்வரும் எந்த போசணைக் குறைபாட்டினால் குருதிச்சோகை நோய் ஏற்படுகின்றது?
1) கல்சியம் 2) இரும்பு 3) புரதம் 4) காபோவைதரேற்

62. உள்நாட்டு பதிவு தபால் ஒன்றுக்கான செலவு எவ்வளவு?
1) ரூபா 20 2) ரூபா 30 3) ரூபா 35 4) ரூபா 25

63. தண்டில் காய்க்கும் தாவரம்
1) நெல்லி
2) விளிம்பி
3) எலுமிச்சை
4) ஈரப்பலா

64. பின்வரும் உணவுகளில் உயிர்ச்சத்து B அதிகம் இருப்பது எது?
1) கரட்
2) பாகற்காய்
3) கத்தரி
4) பலாக்காய்

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 01. சங்கிலிக்கொம்பு 02. கறுப்பு - வெள்ளை 03. பயன்படுகின்றது 04. எலி
05. கணனித்திரை 06. நிகழ்காலம் (02). 07. கணை 08. கோடரி
09. உதறல் (03). 10. பிழை 11. சரி
(04). 12. நான் கரும்பலகையை துப்பரவு செய்வேன் 13. உன்னுடைய புத்தகத்தை கொண்டு வா
(05). 14. please give me a pencil (06). 15. e 16. h (07). 17. அன்ன குருத்துமா எனவா
(08). 18. சிற்றுண்டிச்சாலை எங்குள்ளது? (09). 19. ஹ 20. சால்ஸ்பிஜ் 21. இங்கிலாந்து
(10). 22. ஒழுகும் கண்ணீரில், சாதி 23. புண்ணியம் செய்யும் 24. தினைத்துணை நன்றிசெயினும்
(11). 25. குடித்து 26. அறிவுரை 27. அழகாக (12). 28 - 30 வரை விரும்பியவசனம்
(13). 31. 3 32. 2 33. 3 34. 4 35. 2 36. 1 37. 2
38. 3 39. 1 40. 3 41. 2 42. 4 43. 1 44. 4
45. 4 (14) 46. 790 47. 999 48. xii, xiv, xv, xvi, xv, xvi, xix, xx
49. 5 50. பி.ப3.55 51. 415.00 52. 300ml 53. 25090 54. 20ml
55. 14cm 56. 5m 57. 6

**இப்பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க
(01) பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

ஒருநாள் சிபிச்சக்கரவர்த்தியின் சிறந்த குணத்தைச் சோதிக்க எமனும், இந்திரனும் விரும்பினர். எமன் புறாவாகவும் இந்திரன் ஒரு பருந்தாகவும் உருமாறினார்கள். அதன் பின்னர் பருந்து புறாவைத் துரத்துவது போல் விரட்டிக் கொண்டு வந்தது அவ்வாறு துரத்தப்பட்டு வந்த புறா சிபிச்சக்கரவர்த்தியின் மடியில் பதறி விழுந்தது.

01. குடித்து என்ற கருத்தை தரும் சொல் ஒன்றை தெரிவு செய்து எழுதுக? ..............
02. பந்தியில் இடம்பெற்றுள்ள பெயர் அடைமொழி எது? ..............
03. உருமாறினார்கள் என்ற சொல்லின் ஒருமைச்சொல்லை தருக? ..............
04. எது புறாவைத் துரத்தி வந்தது? ..............
05. விரும்பினர் என்ற சொல்லைக் குறிக்கும் காலம் யாது? ..............
06. மாமன்னர் என்ற கருத்தை தரும் சொல்லை எழுதுக? ..............

(02) தடித்த சொல்லின் கருத்தினை எழுதுக
07. இனி என் **தவமும்** பலித்து விட்டது ..............
08. அரசனது சொல் எவ்வளவு **உன்னதமானது** ..............
09. பாஸ்டர் கால் நடைகளுக்கு வரும் நோய் பற்றியும் **ஆராய்ந்தார்** ..............

(03) வெற்றிடங்களுக்கு வரவேண்டிய விடையை தெரிவு செய்து கோடிடுக
10. விடைகள் ஒழுங்குமாறித் .............. (தரப்பட்டது, தரப்பட்டுள்ளன)
11. சந்திரனையும் கண்சிமிட்டும் நட்சத்திரங்களையும் .............. (எமது, எனது) கூட்டத்தாருடன் சேர்ந்தே இரசித்தேன்
12. தாயே நாம் தங்களை காணவே .............. (வந்துள்ளோம், வந்துள்ளேன்)

(04) பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் இரு தனி வாக்கியங்களாக்கி எழுதுக
13. நான் காலையில் எழுந்து பாடலை மனனம் செய்தேன்
..............
..............
14. நாம் முயற்சி செய்தால் வெற்றி காண்போம்
..............
..............

(05) அடைப்பில் உள்ள சொற்களை வைத்து இடைவெளியில் நிரப்புக
(கண்டனர், பறவைகள், ஆடுகின்றோம், பாடின)
15. இறந்தகால, உயர்திணை, படர்க்கை, வினைச்சொல் ..............
16. இறந்தகால அஃறிணை, பன்மை, வினைச்சொல் ..............
17. படர்க்கை, பன்மை, பெயர்ச்சொல் ..............

(06) பின்வரும் அடைமொழிகளை பயன்படுத்தி வாக்கியத்தை பூரணப்படுத்துக
(உயர்ந்த, சாதுவான, பலத்த, சிறந்த)

18. ..........................மழை பொழிந்தது 19. .............................. மரம் விழுந்தது

20. ..........................மாணவன் எழுதினான் 21. .............................எலியை பிடித்தது

(07) பின்வரும் வாக்கியங்களில் பெயராகவும், வினையாகவும் வரக்கூடிய சொல்லை கோடிட்டுக் காட்டுக

22. நாம் சிறந்த கலை வாதியாக இருக்க வேண்டும் 23. பனை ஓலையினால் பாய் பின்னலாம்

24. தம்பி நீ நன்றாக படி 25. கூரையில் ஓடு வேயப்பட்டிருந்தது

(08)கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக

26. உன்னுடைய புத்தகத்தைக் கொண்டு வா? ..........................................

(09)கருத்தினை எழுதுக

27. I love My country ..........................................

(10)பின்வரும் ஆங்கிலச்சொற்களில் விடுபட்டுள்ள எழுத்தை இடைவெளியில் எழுதுக

28. Mo .........ning 29. Gre..........n 30. Th........rteen

(11)சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக

31. அம்மா சமைத்து விட்டாரா? ..........................................

(12)கருத்தினை தமிழில் தருக

32. அம்மா வத்துர கெனாவா? ..........................................

(13)"எனது அன்பான நண்பன்" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருப்பதுடன் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக அமைய வேண்டும்

33. ..........................................

34. ..........................................

35. ..........................................

(14)கணித வினாக்களுக்கு விடை தருக

36. பின்வரும் நிறையை கிராமில் தருக? 01. 3kg 50g ..........................................

02. 10kg 100g ..........................................

37. கழிக்குக

01.

| L | ML |
|---|---|
| 6 | 50 |
| - 4 | 250 |

02.

| மணி | நிமிடம் |
|---|---|
| 10 | 20 |
| - 06 | 50 |

38. 1kg தேயிலை, 500g பருப்பு வாங்குவதற்கு ரூபா 290 செலவாகும். எனின் 500g தேயிலை, 250g பருப்பு ஆகியவற்றை வாங்குவதற்கு எவ்வளவு பணம் செலவாகும்?

..........................................

39. 4,8,6 எனும் எண்களைச் சரியாக பயன்படுத்தி வெற்றிடத்தை நிரப்புக

01. 5 + .......... + ........ = 19 02. .......... + ........ + 9 = 21

40. 1800ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 500ml நீர் இருந்தது அப்பாத்திரத்தில் மேலும் 1.5லீற்றர் நீரை கவனமாக ஊற்றும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது?

..........................................


41. 1990ஆம் ஆண்டு வெள்ளி விழாவை கொண்டாடிய எமது பாடசாலை அதன் பொன் விழாவை எத்தனையாம் ஆண்டு கொண்டாடப்படும்?

..........................................

42. 125 நெல்லிக்கனிகளில் $\frac{3}{5}$ பங்கு எத்தனை நெல்லிக்கனிகளாகும்? ..........................................



(15)ஒரு பாடசாலையில் உள்ள மாணவர்கள் விரும்பும் விளையாட்டுக்கள் பற்றிய தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளது




43. ஹொக்கி விளையாட்டை விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்? ..........................................

44. வலைப்பந்தை விரும்பும் மாணவரது எண்ணிக்கையை போல் இருமடங்கு மாணவர்கள் கிரிக்கெட்டை விரும்புகின்றனர். இதனை வரிப்படத்தில் குறித்துக் காட்டுக

45. உதைபந்தை விரும்பம் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க எத்தனை மாணவர்கள் கூடுதலாக கரப்பந்தை விரும்புகின்றனர்?

..........................................

46. இந்த 5 விளையாட்டுக்களையும் விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..........................................

47. இருபதாயிரத்து இருபது இதனை இலக்கத்தில் எழுதுக? ..........................................

(16)மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

48. களி மண்ணினால் தமது வாழிடங்களை அமைத்துக் கொள்பவை?

1) எறும்பு - பல்லி 2) தேனீ - குளவி
3) மழைக்குருவி - கறையான் 4) அணில் - அழுங்கு

49. இலங்கை நாட்டுக்குரித்தான முலையூட்டி எது?

1) அணில் 2) ஆடு
3) வௌவால் 4) மூஞ்சூறு

50. தச்சன் ஒருவன் உளியால் வேலை செய்யும் போது கூடவே அவ்வேலைக்குப் பயன்படுத்தும் ஒரு உபகரணம் எது?

1) சீவுளி 2) மரச்சுத்தியல்
3) அரம் 4) கைவாள்

51. இலங்கையின் நீர்த்தேக்கங்களுள் விசாலமானது எது?

1) ரந்தெனிகல 2) கொத்மலை
3) லக்ஷபான 4) விக்டோரியா

52. மாசி மாதக்காலப்பகுதியில் வீட்டுத்தோட்டத்தில் பூக்கக்கூடிய தாவரம்?

1) ஜம்பு 2) கோப்பி
3) ரம்புட்டான் 4) கொய்யா

53. ஒரு முறை மாத்திரம் காய்க்கும் தாவரம்?

1) தென்னை 2) கராம்பு
3) மங்குஸ்தான் 4) வாழை

54. மருத்துவத் தாவரம் அல்லாதது?

1) வேம்பு 2) குப்பைமேனி
3) ஜம்பு 4) சீதேவியார் செங்கழுநீர்

55. உணவை மெல்லாமல் விழுங்கும் பிராணி

1) மலைப்பாம்பு 2) ஆமை
3) சிறுத்தை 4) யானை

# வித்தியாவின் கொலையைக் கண்டித்து யாழில் இடம்பெற்ற போராட்டங்கள்




யாழ்/இந்து மகளிர் கல்லூரி


யாழ்/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்


தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி (93)


யாழ்/இந்துக்கல்லூரி





நல்லூரில் நடைபெற்ற பேரணி






யாழ். நகரில் இடம்பெற்ற போராட்டம்





படங்கள் (ஆர்.இராஜகுமார்)

# கொலம்பியாவில் மண்சரிவு
# 50 இற்கும் மேற்பட்டோர் பலி



வட-மேற்கு கொலம்பியாவின் அன்டியோகுய்யா மாநிலத்தில் ஏற்பட்ட மண் சரிவில் 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் இந்த அனர்த்தத்தில் சிக்கி காணாமற்போனோர் தொடர்பான தகவல்கள் இதுவரை சரியாக கிடைக்கப் பெறவில்லை என கொலம்பிய ஜனாதிபதி யுவான் மனுவல் சந டோஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கடந்த சில நாட்களாக கொலம்பியாவில் பெய்து வரும் தொடர் மழையால் அங்குள்ள நதி லிபோரியானா பெருக் கெடுத்துள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று ஏற்பட்ட மண் சரிவிற்கும் இந்த மோசமான காலநிலையே காரணம் என வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொலம்பியாவில் பல கிராமங்கள் நேற்றுமுன தினம் வீசிய சுழல் காற்றில் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த அனர்த்தங்களில் சிக்கியுள்ள பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் மீட்புப்படையினரும் ஊர் வாசிகளும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அனர்த்தம் இடம்பெற்ற பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்த கொலம்பிய ஜனாதிபதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவதாகவும் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுப்பதாகவும் வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொது நிகழ்ச்சியில் ஜெயா



அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சென்னை அண்ணாசாலை ஸ்பென்சர் அருகே அமைந்துள்ள அ.தி.மு.க நிறுவனர் எம்.ஜி.ஆர். சிலை உள்ளிட்ட தலைவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தவுள்ளார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் தீர்ப்பு வெளியான பின்னர் அவர் இன்னும் பொதுமக்களை சந்திக்காத நிலையில், நாளை மறுதினம் தலைவர்கள் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வழக்கிலிருந்து விடுதலையான பின்னர் அவர் கலந்து கொள்ளும் முதல் பொது நிகழ்ச்சி இதுவாகும். இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிவிப்பில், அ.தி.மு.க பொதுச் செயலாளர், நாளைமறுதினம் கிழமை பிற்பகல் 2 மணி அளவில், சென்னை, அண்ணா சாலை, ஸ்பென்சர் அருகே அமைந்துள்ள கழக நிறுவனத் தலைவர், எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குற்றவாளிகளுக்கு தலை வெட்ட ஆட்கள் தேவையென விளம்பரம்

குற்றவாளிகளின் தலையை வெட்ட புதிய ஆட்கள் தேவை என சவுதி அரேபியா அரசு பகீர் விளம்பரம் வெளியிட்டுள்ளது.

மரண தண்டனையை நிறைவேற்ற ஆட்கள் பற்றாக்குறை உள்ளதால், புதிதாக 8 நபர்களை தெரிவு செய்யவுள்ளதாக சவுதி அரசு நேற்று முன்தினம் ஒன்லைனில் விளம்பரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், புதிதாக இப்பணிக்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு முன் அனுபவம் எதுவும் தேவையில்லை. நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் தலைகளை பொது இடத்தில் வெட்ட வேண்டும்.

அதே போல், சிறிய குற்றங்களுக்காக தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் கை அல்லது கால்களை வெட்ட வேண்டும் என்ற விவரங்கள் அந்த விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மத நீதிமன்றங்களால் தீர்ப்புகள் வழங்கப்படுவதால், தண்டனையை நிறைவேற்றும் பணியில் ஈடுபடுபவர்களை மத செயலாளர்கள் என அழைக்கப்படுவார்கள் என்றும் ஆனால், அவர்களுக்கு குறைந்த அளவு ஊதியமே வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சீன.பிரதமர் பிரேசிலுக்கு விஜயம் முக்கிய சந்திப்புக்களுக்கு திட்டம்

சீனா பிரதமர் லீ கீகுயங் பிரேசிலுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

பிரேசிலின் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் பிரதமர் லீ கீகுயங் அங்கு மூன்று நாள் தங்கியிருப்பார் என பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரது விஜயத்தின் போது பிரேசிலின் ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளார் எனவும் ஊடக சந்திப்பொன்றையும் மேற்கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருநாடுகளினது அபிவிருத்தி, அரசியல் நிலைமைகள், பொருளாதாரம் விவசாயம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக கலந்தாலோசிக்கப்படவுள்ளதாக பிரதமர் அலுவலகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலில் இடம்பெற்றுவரும் வர்த்தக மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகளிலும் இவர் கலந்து கொள்வார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# புதிய கட்டடம் அமைக்க நேபாள அரசு தடை

நேபாளத்தில் புதிய கட்டிடங்கள் கட்டும் பணிகளை அரசாங்கம் இரண்டு மாதங்களுக்கு நிறுத்தி வைத்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட நில நடுக்கத்தில் உயரமான பல கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின.

அங்கு அண்மையில் ஏற்பட்ட இரண்டு கடுமையான நில நடுக்கங்களை அடுத்தே நேபாள அரசாங்கம் இந்த அதிரடி தீர்மானத்திற்கு வந்துள்ளது.

அதுமட்டுமன்றி கட்டுமானத்தில் இருக்கும் அனைத்துக் கட்டடங்களிலும் இரண்டு மாடிகள் மட்டுமே கட்டப்பட வேண்டும் எனும் கட்டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளது.

அங்கு கட்டடங்கள் கட்டப்படுவதற்கான விதிமுறைகள் கடுமையாக்கப்பட்டு தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் விதித்துள்ள இந் தக் கட்டுமானத் தடை எதிர்வரும் ஜுலை மாதம் 16ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



எனினும் அண்மைய நில நடுக்கங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கட்டப்படும் தற்காலிகத் தங்குமிடங்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தாது என்றும் கூறப்பட்டுள்ளது.

# உளவுத் தகவல்களை பகிர்வதற்கு பாகிஸ்தான் -ஆப்கான் ஒப்பந்தம்

(இஸ்லாமாபாத்)

உளவுத்துறை தகவல்களை பகிர்ந்துக்கொள்ள பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையே புதிய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கு இடையே பல ஆண்டுகளாக நீடித்த பூசல்கள் மற்றும் தவறான புரிதல்கள் காரணமாக இதுதொடர்பான உடன்பாடு ஏற்படாமல் இருந்தது. இந்நிலையில், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப், இராணுவ தலைவர் ரஹீல் செரீப் மற்றும் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ. தலைவர் ரிஸ்வான் அக்தார் ஆகியோர் கடந்த வாரம் ஆப்கானிஸ்தான் சென்றபோது இந்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்தது என்று பாகிஸ்தான் இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

தலிபான் தீவிரவாதிகளை அழிக்க மேலும் ஒருங்கிணைந்து செயறபடவும் இருநாடுகள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது. உளவுத்துறை தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல், இருதரப்பும் உளவுத்துறை விவகாரங்களில்



இணைந்து பணியாற்றுதல் ஆகியவை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையே கையெழுத்து ஆனது என்று பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடரபாளர் மேஜர் ஜெனரல் அசிம் பாஜ்வா தெரிவித்துள்ளார். இருதரப்பு உளவுத்துறையும், தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் இணைந்து பணியாற்றுதல் மற்றும் விசாரணை செய்வது ஆகியவை தொடர்பான ஒப்பந்தமும் கையெழுத்து ஆகியுள்ளது.

இருநாடுகள் இடையே பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்களும் கையெழுத்து ஆகியுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. ஆப்கானிஸ்தான் உளவுத்துறைக்கு, பாகிஸ்தான் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ. எஸ்.இனி பயிற்சி அளிக்கும் என்று கூறப்படுகிறது.

# விழுந்து நொருங்கியது இந்திய போர் விமானம்

(கவுகாத்தி)

இந்திய விமானப்படைக்கு சொந்தமான Su-30 ரகப் போர் விமானம் நேற்று பிற்பகல் சுமார் 12.30 மணியளவில் அசாம் மாநிலத்தில் விழுந்து நொருங்கியது. இந்த விமானத்தில் பயிற்சிக்காக



சென்ற இரு விமானிகளும் பரசூட் மூலம் கீழே குதித்து உயிர் தப்பியுள்ளனர்.

இவ்விபத்து பற்றி உரிய விசாரணை நடாத்துமாறு இந்திய விமானப்படை உயரதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

உலகச் செய்திகள்

# கொண்டாட்டத்தை சீர்குலைத்தமைக்காக அரசாங்கம் வெட்கப்படவேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு

போர் வெற்றிக் கொண்டாட்டங்களை சீர்குலைத்தமைக்காக அரசாங்கம் வெட்கப்பட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நேற்று முன்தினம் மாலை நடந்த, மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட போர் வெற்றி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தீவிரவாதத்தை நாம் தோற்கடித்த நாள், ஒரு வெற்றி நாள். இந்த நாளை, வெற்றி நாளாகத் தான் கொண்டாட வேண்டுமே தவிர, நினைவு நாளாக அல்ல.

முன்னைய அரசாங்கங்கள் புலிகளைத் தோற்கடிக்கத் தவறியிருந்தன. அவர்கள் எப்போதுமே, தீவிரவாதிகள் முன் மண்டியிடத் தயாராக இருந்தார்கள்.

புலிகளைத் தோற்கடிப்பது சாத்தியமில்லை என்று வெளிநாட்டு அரசாங்கங்கள் கூட, என்னை சமாளிக்க முற்பட்டன.

ஆனால் நாட்டைப் பாதுகாப்பதற்காக, நான் அவர்களுடன் போரிட முடிவு செய்தேன்.

என்னைப் பழிவாங்க விரும்பும் எவரும், என்னைத் தண்டிக்கலாம். அவர்களால் என்னை சிறையில் அடைக்க முடியும். நான் அதற்குப் பயப்படவில்லை. ஆனால், போர் வீரர்களின் மகிழ்ச்சியை அழிக்கக்கூடாது.

இந்த நிகழ்வில், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், மேடையில் அமைக்கப்பட்டிருந்த துப்பாக்கிரவை போன்று வடிவமைக்கப்பட்ட தீபத்தை மகிந்த ராஜபக்ஷ ஏற்றி வைக்க, அரங்கில் கூடியிருந்தவர்கள் கைகளில் மெழுகு வர்த்திகளை ஏந்தியபடி, படையினரை நினைவு கூர்ந்தனர்.

# அசம்பாவிதங்களைத் தடுக்க அதிரடிப்படை நகரில் குவிப்பு

யாழ்.நகரில் நேற்று இடம் பெற்ற போராட்டங்களை அடுத்து யாழ்.நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மாணவியின் படுகொலையை கண்டித்தும் அதைப் புரிந்தவர்களுக்கான தண்டனையை உடன் வழங்கக் கோரி இளைஞர்களால் பெரியளவில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல் ரயர் எரிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதுடன் சில கடை களும் தாக்குதலுக்கு இலக்கா கின. இதனால் ஏற்பட்ட பதற்றத்தை தணிக்க பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் யாழ்நகரில் வீதி எங்கும் பாது காப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

நேற்று மாலை சனநடமாட்டமற்ற நிலையில் யாழ்.நகர் இருந்தது எனினும் பெரியளவிலான அசம்பாவிதங்கள் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (இ,25)

# சர்வதேச மனிதாபிமான சட்ட தென்ஆசிய மாநாடு

சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் தென் ஆசிய பிராந்திய மாநாடு இலங்கையில் ஆரம்பமாகியுள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் ஆறாவது தென் ஆசிய பிராந்திய மாநாடு இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பில் ஆரம்பமாகியுள்ளது. நாளைவரை இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

பிரதிவெளிவிவகார அமைச்சர் அஜித் பெரெரா தலைமையில் நேற்று இந்த மாநாடு ஆரம்பமானது.

### ஸ்தம்பித்தது..

களால் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்.நகரில் காலை வேளையில் இளைஞர்கள் குழு ஒன்றினால் வர்த்தக நிலையங்களை பூட்டி எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு கூறி நகரின் அனைத்து வீதிகளிலும் இவ்விளைஞர்கள் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து கடைகள் அனைத்தும் இழுத்துமூடப்பட்டன.

இதனையடுத்து யாழ். நகரில் எல்லா இடங்களிலும் கலகம் அடக்கும் பொலிஸார் நிறுத்தப்பட்டதுடன் விசேட அதிரடிப்படையினரும் இதன்போது கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.எந்தவித முன்னறிவிப்புமின்றி இந்த இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமையால் தமது தேவைகளுக்காக யாழ்ப்பாணத்திற்கு வந்த பெருமளவான மக்கள் பாதிப்படைந்தனர். நண்பகலில் சனநடமாட்டம் யாழ். நகரில் காணப்படவில்லை. நகரிலுள்ள வங்கிகள் எல்லாம் இதற்கு ஆதரவாக மூடப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் இக் காமுகர்களுக்கு உடனடியாக அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் என வலியுறுத்தி கோசங்களை எழுப்பியிருந்தனர்.

பல்கலைக்கழகம், பொலிஸ்நிலையம், நீதிமன்றம் என பல்வேறு இடங்களுக்கும் இவர்கள் ஊர்வலமாகச் சென்று தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (25,இ)

### இன்று...

களையும் மூடி முழு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு பூரண ஆதரவை வழங்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறைகூவல் விடுத்துள்ளது.

பாடசாலைகள், அலுவலகங்கள் அனைத்தையும் மூடி ஒன்றுசேருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

காலை10 மணிக்கு வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நடைபெறவுள்ள அமைதி ஒன்றுகூடலில் மதகுருமார், பொது அமைப்புக்கள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், ஆசிரிய கலாசாலை, கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள், அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், வர்த்தகப்பெருமக்கள், இளைஞர்கள், யுவதிகள், பொதுமக்கள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அறிவித்துள்ளது.

அதேவேளை, புங்குடுதீவைச் சேர்ந்த உயர்தர மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து வடக்கிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இன்று ஒருமணிநேர புறக்கணிப்புப் போராட்டம் நடத்துவதென்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு முடிவெடுத்துள்ளது.

இதன்படி அனைத்துப் பாடசாலைகளிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் 12 மணிவரை அமைதியான கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துமாறு அமைச்சு கோரியுள்ளது.

இதன்போது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஒன்றிணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. அத்துடன் இன்று தொடக்கம் 29 ஆம் திகதி வரையான நாட்களை விழிப்புணர்வு வாரமாகவும் கல்வி அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது. இந்தக் காலப்பகுதியில் மாணவர், பெண்களுக்கெதிரான வன்முறைகள், போதைப்பொருள், மதுபாவனை என்பவற்றைச் சமூகத்திலிருந்து ஒழிக்கும் விதமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கொலையாளி...

லாய்ப்புடன் கேட்டுக்கொண்டுள்ளனர். நடந்த கொடுமை உலகில் யாருக்கும் நடக்கக்கூடாத கொடுமை. அப்படியான ஒன்றுக்காக இதை இழைத்தவர்கள் மனிதர்களே அல்லர் என மக்கள் கொந்தளிக்கும் நிலையில், இந்தக் கொடூரமான குற்றமிழைத்தவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களுக்காக சட்டத்தரணிகள் எவருமே முன்னிலையாகக் கூடாது என்பதான கோஷங்கள் பல்வேறு தரப்பிலிருந்தும் பெருமளவில் எழ ஆரம்பித்திருக்கின்றது.

இந்த நேரத்தில், அந்த மண்ணிலேயே பிறந்ததாகக் கூறப்படும் பிரபல சட்டத்தரணியான ஒருவர் என்ன நோக்கத்துடன் இவ்வாறான இழிசெயலுக்குத் துணை போகிறார் என அப்பகுதி மக்கள் கோபத்துடன் தெரிவித்துள்ளனர் அத்துடன் அவர் கட்டாயம் இதற்கான பதிலை வழங்க வேண்டும் என கொந்தளிப்புடன் என்னிடம் வலியுறுத்தியுள்ளனர். இப்போது பிரதிப்பொலிஸ்மா அதிபர், சம்பந்தப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர், நாட்டைவிட்டு செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டு கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். அவர் உடனடியாகவே யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு சரியான முறையில் நீதி விசாரணைமேற் கொள்ளப்படவேண்டும் என மக்கள் எதிர்பார்த்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

### கொலை...

காரத்தை தந்திரமாக கையாளுவதற்காக கொழும்பிலிருந்து திடீரென புங்குடுதீவுக்கு வருகை தந்த மேற்படி சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறனை அப்பகுதி மக்கள் திரண்டு சுற்றிவளைத்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் அவர் அங்கிருந்து வெளியேற முடியாமற் போனது. அவர் பயணித்த வாகனம் ஒரு அங்குலம் தன்னும் அசையமுடியாது போனது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு மேலதிக பொலிஸாரும் அதிரடிப்படையினரும் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டனர்.

ஆர்ப்பாட்டம் செய்யும் பொதுமக்களை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா சமாதானம் செய்து வைக்க முயற்சி செய்தார்.

புங்குடுதீவில் மாணவி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து வன்முறைகள் அதிகரித்திருந்த நிலையில் அதனை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் குழப்பத்தில் முடிவடைந்தன.

எனினும் மேற்படி சந்தேகநபரான மகாலிங்கம் சிவகுமார் என்பவர் நாட்டைவிட்டு தப்பிக்க உதவினார் என்ற குற்றச்சாட்டில் புங்குடுதீவு மக்களால் சுற்றிவளைக்கப்பட்டிருந்த சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறன் மக்களின் எதிர்ப்பையும் மீறி பொலிஸார், கடற்படை மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் நேற்று மாலை புங்குடுதீவிலிருந்து யாழ் நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சந்தேக நபரான மகாலிங்கம் சிவகுமார் என்பவரை தங்களிடம் ஒப்படைக்கும் வரை சட்டத்தரணி வி.ரி.தமிழ்மாறனை செல்ல அனுமதிக்க முடியாது என கூறி பொதுமக்கள் தடை ஏற்படுத்தியிருந்தனர். இது தொடர்பில் பொதுமக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட சமரசப் பேச்சுக்கள் வெற்றியளிக்காத நிலையில், மக்களின் எதிர்ப்பை மீறி வி.ரி.தமிழ்மாறன் நேற்று மாலை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அதேவேளை, வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் மகாலிங்கம் சிவகுமாரை ஊர்காவற்றுறைக்கு கொண்டு செல்வதற்காக ஊர்காவற்றுறை பொலிஸார் வெள்ளவத்தைக்கு நேற்று மாலை புறப்பட்டுச் சென்றனர்.

அதேவேளை, சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் பிரதேச செயலர் ஊடாக மக்களுக்கு எழுத்து மூல கடிதம் ஒன்றினை வழங்கியுள்ளார். அதில் குறிப்பிட்டதாவது,

சிவலோகநாதன் வித்தியா என்பவரின் கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட மகாலிங்கம் சிவகுமார் 19.5.2015 அன்று வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரை இன்று 12 மணிக்கு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதாக அவர் எழுத்து மூல கடிதத்தினை வழங்கினார்.

இதன் பின்னர் புங்குடுதீவு மக்கள் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு எழுதிய வித்தியாவின் கொலை தொடர்பான 9 ஆவது சந்தேக நபர் தப்பிச செல்வதற்கு உதவிய வி.ரி.தமிழ்மாறன் என்பவரை,

வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டுள்ள சிவகுமாரை இன்று 12 மணிக்கு வடமாகாண பொலிஸ்மா அதிபர் லலித்ஜெயசிங்க ஆஜர்ப்படுத்தும் வரை

பொதுமக்களாகிய நாங்கள் பிரதேச செயலர், கிராம சேவகர்கள், பிரதேச சபை தவிசாளர், பொது அமைப்புக்கள் கடற்படை முன்னிலையில் வி.ரி.தமிழ்மாறனை மிகுந்த நம்பிக்கையுடன் ஒப்படைக்கின்றோம் என எழுதியிருந்தனர். (25,21)

### அத்தியாவசிய...

நடவடிக்கையால் வங்கிகளுக்கு வந்தோர், வர்த்தக நிலையங்கள் என்பன முழுமையாக செயலிழந்ததுடன் வாடிக்கையாளர்களும் பெரும் பாதிப்பிற்கிலக்காகினர். குறிப்பாக தேநீர் கடை உரிமையாளர்கள் நேற்றுக்காலை பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

ஒரு செயற்பாட்டை முன்னெடுக்கும் போது அதற்கு முன்னறிவித்தல் கொடுத்து அனைவரதும் ஒத்துழைப்பையும் பெற்றே அதனை முன்னெடுக்க வேண்டும். இதனை விடுத்து திடீரென இவ்வாறான செயற்பாட்டை மேற்கொள்வதனால் பாதிக்கப்படுவது தாமேயென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்துடன் தமக்கு எவ்விததொடர்பும் இல்லை யென வணிகர் கழகவட்டாரங்கள் தெரிவித்தன. இளைஞர்களின் வற்புறுத்தல் காரணமாகவே வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டதாகவும், சில வர்த்தக நிலையங்கள் மீது வேண்டுமென்றே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### யார் இந்த...

பின் மிக முக்கிய பிரமுகர் என்றும், இவர்தான் கூட்டமைப்பின் சட்ட ஆலோசகர்களில் முக்கியமானவர் என்றும் இவர்அரசியலமைப்பு சட்ட வல்லுநர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பிரபல சட்டத்துறைவிரிவுரையாளர். கடந்த வடக்கு மாகாண சபைத்தேர்தலின்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக பிரேரிக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர் அதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது களம் இறக்குவதற்காக கூட்டமைப்பினர் தயாராக வைத்திருக்கும் வேட்பாளர் பட்டியலில் இவர் முதன்மையானவராக உள்ளார்.

இவ்வாறான இந்த சட்டத்தரணியே புங்குடுதீவு பாலியல் குற்றவாளி தப்பிச்செல்ல தந்திரமாக முயற்சி செய்தார் என்று புங்குடுதீவு மக்கள் நேற்று போர்க்கொடி தூக்கினர்.

இதேபோலவே பாலியல் குற்றவாளிகளான சுவாமிபிரேமானந்தாவின் சீடர்களுக்கு இந்திய அரசு விடுதலை வழங்கவேண்டும். என்று கோரி இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு இப்போதைய வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவசர கடிதம் எழுதியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# இறுதி யுத்தம் செய்தே பாலச்சந்திரன் பலியானார்

## இப்படிச் சொல்கிறார் பொன்சேகா

(கொழும்பு)

**வன்னியில் போரின் இறுதிக்கட்டத்தில் 40 ஆயிரம் பொது மக்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டதான குற்றச்சாட்டையும், பாலச்சந்திரன் பிரபாகரன், படுகொலைக் குற்றச்சாட்டையும், இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நிராகரித்துள்ளார்.**



போர் நிறைவடைந்து ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதையொட்டி, தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்திருந்த செவ்வியிலேயே, போருக்குத் தலைமை தாங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தும் சுதந்திரம் வழங்கப்படாமையால், இலங்கை இராணுவம் மிக கடுமையான விலையைக் கொடுக்க நேரிட்டது.

பொதுமக்களைக் கருத்தில் கொண்டு நான்கரை மாதங்கள் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதை விட வேறு வழி இராணுவத்துக்கு இருக்கவில்லை.

வெளிநாட்டு அழுத்தங்களினால், கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்று அரசாங்கம் எடுத்த முடிவினால், எமது படையினர் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.

2009 ஜனவரி தொடக்கம் மே வரையான காலத்தில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் படையினருமாக, 2000 பேர் கொல்லப்பட்டனர். 2008ஆம் ஆண்டு முழுவதும் கொல்லப்பட்ட படையினருக்கு சமமான எண்ணிக்கை இது.

முன்னெப்போதும் இல்லாதளவுக்கு ஏற்பட்ட இந்த இழப்புகள், போர் எந்தளவுக்கு கடுமையான சூழலில் இடம்பெற்றது என்பதை வெளிப்படுத்துகிறது.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகனான 12 வயதுடைய பாலச்சந்திரன், சண்டையின் போதே உயிரிழந்திருக்க வேண்டும்.எனது படையினர் அதற்குப் பொறுப்பு அல்ல. போரில் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தால், அங்கு எலும்புக்கூடுகள் தான் மிஞ்சியிருக்கும்.

சரணடைந்த விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதான குற்றச்சாட்டுக் குறித்து கருத்து வெளியிட முடியாது.' ஊடகங்களால் விவாதிக் கப்பட்ட வெள்ளைக் கொடி சம்பவம், இயந்திரக் காலாற் படைக்குத் தேவையான கவச போர் ஊர்திகளை வாங்குவதற்காக நான் சீனா சென்றிருந்த போதே நடந்ததாக குற்றம்சாட் டப்படுகிறது.

2009 மே 11 ஆம் திகதி சீனா சென்ற நான், மே 17ஆம் திகதி காலை 9 மணியளவிலேயே நாடு திரும்பினேன். நடவடிக்கைத் தலைமையகத்தில் நான் இல்லாவிட்டாலும் நாளொன்றுக்கு மூன்று தடவைகள் நான் வழிகாட்டல் கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தேன்.

நான் சீனாவுக்குப் புறப்பட்ட போதே, போர், சார்ஜன்ட்கள் மற்றும் கோப்ரல்களுக்கு (இள நிலை அதிகாரிகள்) மாற்றப்பட்டு விட்டது. எதிரிகள் 12 கி.மீ. நீளமான, 2 கி.மீ அகலமான பகுதிக்குள் சிக்கி விட்டனர். சார்ஜன்ட்களும், கோப்ரல்களும் எதிரிகளின் நிலப்பகுதிக்குள் முன்னேறுவதற்கு தலைமை தாங்கினர்.

இரண்டு வாரங்களுக்கு மேல் விடுதலைப் புலிகளால் தாக்குப்பிடிக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மத்திய வங்கி ஆளுநர் விவகாரத்தால் நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

மத்திய வங்கி ஆளுநர் விவகாரம் தொடர்பாக எதிர்க் கட்சியினர் நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைத்த யோசனையால் சபையில் ஏற்பட்ட அமைதியின்மையையடுத்து நாடாளுமன்றம் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி அளுநரை பதவி விலக்குமாறு கோரி எதிர்க்கட்சியினர் சபையில் யோசனையொன்றை முன்வைத்து அதனை நேற்றைய தினமே விவாதத்தை நடத்துமாறு கோரிய நிலையில் அதற்கு ஆளும் கட்சி இணங்காததையடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

இதன்போது இரண்டு தடவைகள் சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டு மூன்றாவது தடவையாக கூடிய போதும் அமைதியேற்பட வில்லை.இதனையடுத்து நாடாளுமன்றத்தை இன்று வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.

# எரிந்த நிலையில் ஆணின் சடலம்மீட்பு




(கிளிநொச்சி)

கிளிநொச்சி, மலையாளபுரம் பகுதியில் எரிந்த நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது. இதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அன்ரனி றொனி (வயது-48)என்பவரது சடலமே மீட்கப்பட்டுள்ளது. இது குறித்த விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (29)



**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யோசனைக்கிணங்க கொழும்பு-10 ஆனந்த மாவத்தை மற்றும் கெட்ட வலமுல்லை மாவத்தை ஆகியவற்றை இணைக்கும் வீதிக்கு *பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா மாவத்தை* என பெயர் சூட்டப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.**

# அநாகரிகத்துக்கு முற்றுப்புள்ளி ஆசிரிய கலாசாலை சமூகம் கோரிக்கை

தமிழ் பேசும் மக்கள் கடந்த மூன்று தசாப்தத்தில் பாரிய பேரழிவுகளால் நொந்து போய் இருந்தாலும் தமது கல்விச் சொத்துக்களை இறுதிவரை இயலுமானவரை பாதுகாத்து வந்துள்ளனர்.

ஆனால் இன்று போர் முடிவுக்கு வந்து இயல்பு வாழ்க்கைக்கு ஓரளவு மக்கள் திரும்பிய நிலையில் தீவக கல்வி வலயத்தில் புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியா பட்டப்பகலில் பாதகர்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தால் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகம் அதிர்ச்சியிலும் தாங்கொணாத் துயரத்திலும் ஆழ்ந்துள்ளது.

மனித நாகரிகமற்ற முறையில் நடைபெற்ற இப்படு கொலையை புரிந்த ஈவிரக்கமற்ற காமுகர்களுக்கு உச்ச கட்டமான தண்டனையை மக்கள் முன்வழங்க வேண்டும் என கல்விச் சமூகம் எதிர்பார்க்கின்றது.

எந்த விதமான கால தாமதத்தையும் இக்கொலை புரிந்த அரக்கர்களுக்கு யாரும் துணை போக வேண்டாம் எனக் கேட்டுக்கொள்வதோடு இனிமேலும் இவ்வாறான சமூகச் சீர்கேடுகள் நடைபெறாமல் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இந்த விடயத்தில் அனைத்து உறவுகளும் ஒன்றினைந்து காமுகர்களை அழிக்கப்போராடுவோம்.

அநியாயமாக கொலை செய்யப்பட்ட வித்தியாவின் ஆத்மா சாந்தி யடைய நாம் பிரார்த்திப்பதோடு துயரத்திலும் கோப்பாய் ஆசிரியர் சமூகம் பங்கு கொள்கிறது என்றும் தெரிவித்துள்ளது. (137)




**புங்குடுதீவு மாணவியின் படுகொலையைக் கண்டித்து நேற்று யாழ்.நகரில் இடம்பெற்ற போராட்டத்தின் போது வீதியில் ரயர்களை போட்டு எரித்து எதிர்ப்பினை வெளிப்படுத்திய வேளையில்... (25)**

# பசில் ராஜபக்ஷ வைத்தியசாலையில் அனுமதி

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட சிறியளவிலான மாரடைப்புக் காரணமாக அவர் வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதாக மேல் மாகாண அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

எனினும் நேற்றுக் காலை அவர் வைத்தியசாலையின் வணிக பிரிவுக்கு மாற்றப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு முதல் பல்வேறு பரிசோதனைகள் பசில் ராஜபக்ஷவிற்கு மேற்கொள்ளப்பட்டதாகவும் இதன் பின்னரே அவர் வணிக பிரிவிற்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.